# யாழ்-மேற்றிராசன புதிய துணை ஆயர்

# மகாவந். எல். ஆர். அன்ரனி அடிகள்

"காதரா நகரத்தைக் காககாவட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியாத்தம்".

காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஞூ ஐப்பசி 19-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 40-ம் இல.



யாழ்ப்பாணம் பரி.கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் பங்குக்குரவரான வண. பிதா லீயோ இராசேந்திரம் அன்ரனி அவர்கள் பரிசுத்தஸ்தானத்தினலே யாழ்ப்பாண மேற்றிராணியாரான ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்களுக்குத் துணைமேற்றிராணியாராக நியமிக்கப்பட்டிருக்கிருரென்ற மங்களசெய்தி இம்மாதம் 10-ம் திகதி வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது. தமது ஆழ்ந்த பக்தி, இயற்கையான தாழ்மை, கபடமற்ற போக்கு, எளிமையான சீவியம், ஆத்மவாஞ்சை ஆதியாம் விசேட சுகுணங்களினல் எல்லோரினதும் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றுள்ள இக்குரவரின் நியமனத்தினல் அக்களிப்படையாதார் எவருமிலர்.

நம்புதிய துணை ஆயர் 1927-ம் ஆண்டு சித்திரை 19-ம் திகதி கரம்பனிலே போஸ்ற்மாஸ்ரர் லீயோ இராஜேந்திரம் அவர்களினதும் அவர்மனைவி பேதுருப்பிள்ளை மரியைப்பிள்ளையினதும் கடைசிப்பிள்ளையாகப் பிறந்தார். இவருக்கு ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் உளர். குழந்தை அன்ரனி பிறந்த 53-ம் நாள் அவரின் தந்தை தமது 42-ம் வயதில் மரணமாயினர். அதனலே பிள்ளைகளைப் பராமரிக்கும் முழுப்பொறுப்பும் தாய் மரியைப்பிள்ளையிலேயே விழுந்தது. இவ்வுத்தம தாயார் 1960-ம் ஆண்டு காலமாயினர்.

அன்ரனி மேற்றிராணியார் தகப்பன் வழியிலும் தாய்வழியிலும் பரம்பரையாகவே திருச்சபைக்குத் தொண்டுசெய்யும் குடும்பங்களிலே உதித்தவர். இவரின் பிதாவழிப்பாட்டனர் வஸ்தியாம்பிள்ளை யாழ்ப்பாண ஆசனக்கோவிலிலும், பரி. அடைக்கலமாதா கோவிலிலும் உபதேசியாராகக் கடமையாற்றியவர். இவரின் மாதாவழிப் பாட்டனர் பேதுருப்பிள்ளை கரம்பன் அர்ச். செபஸ்தியார்கோவில் மூப்பராகவிருந்தவர். பேதுருப்பிள்ளை மூப்பர் காலஞ்சென்றபின் அவரின் மகளும் புதிய ஆயரின் தாயாருமான மரியப்பிள்ளையே தமது இறுதிமட்டும் மூப்பரின் கடமைகளைத் திறம்பட ஆற்றிவந்தார்.

மாணவன் அன்ரனி தமது ஆரம்ப கல்வியைக் கரம்பனிலுள்ள திருக்குடும்பக் கன்னியரிடமிருந்து பெற்றபின் ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரியைச் சேர்ந்தார். அங்கே தேவ அழைப்புக்குச் செவிசாய்த்து 1940-ம் ஆண்டு தைமாதம் 14-ந் திகதி யாழ்ப்பாணம் அர்ச். மார்த்தினர் குருமடத்தைச் சேர்ந்து அர்ச். பத்திரிசியார் கல்லூரியிலே கல்விபயின்று பரீட்சைகளிலே கண்ணியமாகச் சித்தியடைந்தார். அதன்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## முத்திப்பேறுபெற்ற ▲ ▲ ▲ ▲

# கோறிய வேதசாட்சிகள்

வத்திக்கான்நகர் — ஞாயிறு

1866 ஆம் ஆண்டு கோறியாதேசத்தில் நிகழ்ந்த வேதகலாபனையின் போது தங்கள் திருமறைக்காக ஆருயிரைத் தயாகஞ்செய்த 24 வேதசாட்சிகள் அன்று (6-10-68) ஞாயிற்றுக்கிழமை சம்பேதுருவானவர் மகா தேவாலயத்தில் நடந்தேறிய பக்திப்பரவசம் உண்டுபண்ணும் திருவைபவம் ஒன்றிலே முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளப்பட்டார்கள். ஏழு பிரான்சிய மிஷனரிமாரும், மனந்திரும்பிக் கிறிஸ்துவேதத்தில் சேர்ந்த 17 கோறியர்களுமே இந்த வேதசாட்சிகள்.

ஒரு புனிதராக அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்படுவதற்காக எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையாகப் பல முறையும் இருந்துவரும் மிகநீண்ட பாதையின் முதற்படியான இத்திருப்பட்டம் அருளுவதைப் பிரகடனஞ்செய்யும் பாப்பரசரின் அதிகாரப் பத்திரம் வாசிக்கப்பட்டபோது அங்கு சமூகமாயிருந்த நூற்றுக்கணக்கான பிரான்சிய, கோறிய யாத்திரிகர்கள் அதனைச் செவிகொடுத்து ஆர்வத்துடன் கேட்டார்கள். கோறியாவின் தலைப்பட்டணமான செயூல் நகர் அதிமேற்றிராணியாரான கிம் செள ஹுவான் ஆண்டகை திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்தார்.

அப்பொழுது கோறியாவின் விக்கார் அப்போஸ்தலிக்குவாயிருந்த மொன்... சைமன் பேர்னியோ, அவரின் துணைவரான மொன்... அன்ரோய்னி டாவொலூய், மற்றும் குருப்பிரசாதிகளான வண. ஜஸ்ற்தே பிறிற்றெனியே ரெஸ், வண. லூயிஸ் போலியே, வண. ஹென்றி டோறியே, வண. பீற்றர் ஓமாய்றே, வண. லூக் ஹுயின் என்பவர்களே வேதசாட்சிகளான 7 மிஷனரிமாருமாவார்கள்.

## ஒற்றுமை முயற்சியில் மேலும் ஒருபடி ஏற்றம்

இங்கிலாந்திலுள்ள உலக கிறிஸ்தவ சபைச்சங்கம் அந்நாட்டின் கத்தோலிக்க மேற்றிராணிமாரில் ஒருவராகிய சல்பட் பிரிவு ஆயர் ஹொலன்ட் அடிகளாரை அச்சங்கத்தின் இணைத்தலைவராகக் கடமையாற்றுமாறு கேட்டிருக்கின்றது. இதுகாலவரையும் உலக கிறிஸ்தவ சபைகளின் சங்கம் கத்தோலிக்க சமயத்தை அதன் அம்சங்களில் ஒன்ருகக் கருதவில்லை. இவ்வருடம் கத்தோலிக்க சமயத்தையும் இச்சங்கத்தில் சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளவும் ஹொலன்ட் அடிகளாரை இணைத்தலைவராக நியமனம் செய்யவும் முற்றுச்செய்திருக்கின்றது.

## சாதிவேற்றுமை எமது நாட்டில் முற்ருக அகலவேண்டும்

"சாதிப்பெருமை பாராட்டுவது ஜனநாயக முறைக்கு முழுதும் முரண்பட்டது. எமது நாடு முன்னேற வேண்டுமானல் சாதி வேற்றுமையை வேரோடு களைந்துவிட வேண்டும்."

இவ்வாறு அன்று மட்டக்களப்பு மெதடிஸ்ற் சென்ரல்கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்த கலாநிதி ஜி. பி. மலலசேகரா அவர்கள் அக்கல்லூரியின் பிள்ளைகளுக்கும் அப்பகுதி மக்களுக்கும் புத்தி புகட்டினர். அரசாங்கம் சட்டங்கள் விதித்து இம்மாற்றத்தை மக்களிடையே நிலைநாட்ட முடியாது. இதற்கு உகந்த இடம் கல்விச்சாலைகளே என்ருர் பேராசிரியர். இது சம்பந்தமாக கல்விமந்திரி இந்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் சாதிவித்தியாசங்கள் தலைகாட்டுவது தென்படுமாயின் உடனடியாகக் கடுமையான முறைகள் கையாளுமாறு வித்தியாபகுதித் தலைவர்களுக்கு விதித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

## பயபிரு மேலும் ஒரு வியற்னமா ?

நைஜீரியாதேசத்தின் ஒரு பிரிவாகிய பயபிரு அத்தேசத்திபிரிந்து விளங்குவதால் நைஜீரிய அரசாங்கத்தின் படைப்பலம் முழுவதாலும் தாக்கப்பட்டபோதிலும், அது அடிபணிவதாகக் காணவில்லை. அமெரிக்க படைப்பலம் பெரிதாயினும் தென் வியற்னமில் இன்னும் சமாதானமும் அமைதியும் ஏற்படாதிருப்பது போலவே பயபிருவின் நிலைமையும் தோன்றுகின்றது. நைஜீரியாவுக்கு அடிபணியப்போவதில்லையெனவும், தேவைப்படின் காடுகளிலும் மலைகளிலும் சதுப்பு நிலங்களிலுமிருந்து போர்செய்து வெற்றிகாண்பது உறுதி எனவும் பயபிருத் தலைவர்கள் கங்கணங்கட்டி நிற்கின்றனர்.

## கற்க...

உயிர்இனங்களில் மனிதன் உயர்ந்தவன், முதற்தரமானவன். பகுத்தறிவில் முதலிடம்பெறும் மனிதன் பிற உயிரினங்களிடமிருந்து கற்கவேண்டிய பண்புகளாவன :

எறும்பு, தேனீ— சுறுசுறுப்பு, உழைப்பு.
புரு— கற்பொழுக்கம்:
நாய்— நன்றியுணர்ச்சி,
கவரிமான்— மானம் விரும்புதல்
காகம்— பகிர்ந்துண்டு வாழ்தல்.

### ஒழுக்கப் புனர்ப்படைக்
## கலக்குழுவினர்

வருகிற மாசத்தில் சர்வதேச ஒழுக்கப் புனர்ப்படைக்கலக் குழுவினரின் ஒரு பகுதியினர் இலங்கையில் கூடஇருக்கின்றனர். இவ்வியக்கம் சர்வதேசமாயமானது. தமது முன்மாதிரியான படைக்கலத்தினல் உலகில் நல்லொழுக்கத்தை நிலைநாட்டுவதே இவர்களது நோக்கம். பிரசங்கங்கள், தொண்டுகள், நாடகங்கள் முதலியன இவர்கள் தமது நோக்கத்தை பூர்த்தியாகக் கடைப்பிடிக்கும் முறைகள். இங்குவர இருக்கும் குழுவினரில் சுமார் 50 பேர் அடங்கியுள்ளனர். இந்தியா, சுவிற்சலாந்து, நியூசிலாந்து சுவீடன் முதலிய தேசத்தவர்கள். பிரசங்கங்கள், ஆலோசனைகள், நடைபெற ஆயத்தங்கள் நடக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

கிழக்கு — மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையில நிலவும நெருக்கடியானநிலைமை தளர்த்தப்பட வேண்டுமானல் — அவைகளிடையே சமரச நிலை ஏற்படவேண்டுமானல் செக்கோசிலவாக்கியாவிலிருந்து வார்சோ ஒப்பந்தப்படைகள் வெளியேறவேணடியது அவசியமென்று பிரான்சியவெளிநாட்டுறவுமந்திரி திரு. டெபிறே ஐக்கியநாடுகளின் பொதுச்சபையில் கூறியிருக்கின்றார்.

அமெரிக்க விண்வெளி வீரர்கள் மூவர் வருகிற கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களிலே அப்பொலோ-8என்றவிண் வெளிக்கப்பலிலே சந்திரனைச் சுற்றி வருவார்களென்றநம்பிக்கை இப்போது அதிகமாகப்பிறந்துள்ளது. பிறுங்போர்மன் என்ற விணவெளிவீரரே அதனைச் செலுத்தவிருக்கின்றனர்.

ஒவ்வோர் ஒன்றரைச் செக்கனுக்கும ஒருகுழந்தைவீதம் இந்தியாவில் பிறந்துகொண்டிருக்கிறது. இந்த விகிதமாகக் குழந்தைகள் பிறந்தால் 1994ஆம்ஆண்டிலே — அதாவது இன்னும் 25வருடகாலத்திலே இந்தியாவின் சனத்தொகை 100 கோடியாகுமென மதிப்பிடப்படுகிறது.

ஸ்பானிய அரசாங்கதலைவரான ஜெனறல் பிறுங்கோ அவர்களுக்குப் பிள்ளை ஒன்றேயொன்றுதான், மரியா டெல் கார்மென்எனப் பெயரிய அவருடைய ஏகபுதல்வி 1950ஆம் ஆண்டு வில்லாவேடேயின் மாக்குஸ் பிரபுவைத் திருமணம் செய்துகொண்டாள். இவர்களுக்கு ஏழுபிள்ளைகள் இருக்கின்றார்கள். நாயகரான பிரபுவுக்கு இப்போதுவயது 46. இவர் சிறந்த ஒருசத்திரவைத்தியர். அருமையான சத்திரசிகிச்சைகள்செய்து பெயர்பெற்றவர்.

ஜெனறல்பிறுங்கோ அவர்களின் மருகரான வில்லாவேடேயின் மாக்குயிஸ்பிரபு மதிரித்நகரிலே லாப்பாஸ் எனுமிடத்திலுள்ள பிரபலஆஸ்பத்திரியில் மார்புச் சத்திரசிகிச்சைப்பகுதித் தலைவர். இவர் அன்றுஞாயிற்றுக்கிழமை ஜுவான் றெட்றிக்குவெஸ் என்ற நோயாளிக்கு மதிரித்நகரிலே விபத்துக்குள்ளாய் மரணமடைந்த ஒரு தொழிலாளியின் மனைவியுடைய இருதயத்தைப் பெயர்த்துப்பொருத்தி அந்நாட்டிலே முதலாவது இருதய மாற்றுச்சிகிச்சையைச் சித்திகரமாக நடத்தியிருக்கின்றார்.

இருதயமாற்றுச் சிகிச்சையின் முன்னேடியெனப் பெயர்விளங்கும் டக்றர்கிறிஸ் பார்ணட் அன்றுசனிக்கிழமை கேப்ரவுண்நகரிலே 52வயதுடைய வெள்ளையரான ஒருபரிசோதகருக்கு உயிர்அளிக்குமாறு இறந்துபோன ஓர் ஆபிரிக்கபெண்ணின் இருதயத்தை எடுத்துப்பொருத்தித் தமது மூன்றாவதுமாற்றுச் சிகிச்சையை நடத்தியிருக்கிறார். எட்டரை மணித்தியாலத்தின்பின் நோயாளியின் இருதயம் வழமைபோல அடித்துக்கொள்ளலாயிற்று. உலகில் இதுவரை நடைபெற்ற 42-வது இருதய மாற்றுச்சிகிச்சை இதுவாகும்.

இத்தாலிய, ரூமேனிய, யூகோசிலேவிய நாடுகளின் கம்யூனிஸ்த கட்சிகள் ரூஷியாவின் தலையீடின்றிச் சுயமாக இயங்குவன. வெளிநாட்டுத் தலையீடின்றியே அந்தந்தநாட்டுக் கம்யூனிஸ்தகட்சிகள் தங்களதுகொள்கைகளைத் தாங்களாகவே நிர்ணயிக்கும்உரிமை அவைகளுக்கு இருக்கவேண்டுமென்று இந்தநாடுகளின் கம்யூனிஸ்த தலைவர்கள் அறிவித்துள்ளார்கள்.

எமதுநாட்டின் எதிர்காலம் சுமுகமானதொன்றாய் இல்லை; உண்மைநிலைமையை அறிந்து அதற்கமையச் செயல்படக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டுமென்று சமீப மஸ்கோப் பேச்சுவார்த்தைகளுக்குப்பின் வெளியிட்ட அறிக்கையிலே செக்கோசிலவாக்கிய கம்யூனிஸ்த கட்சித்தலைவர் அலெக்சான்டர் டூப்செக் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவிலே மோட்டார்ரதங்களின் தொகையைப்போலப் பன்னிருமடங்கு மாட்டுவண்டிகள் அதாவது ஒவ்வொருமோட்டார் ரதத்துக்கும் பன்னிருமாட்டுவணடிகள் இருந்துவருவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ரூஷியபடையெடுப்பாலே 40,000பேருக்கும், 70,000பேருக்குமிடைப்பட்டசெக்மக்கள் தங்களுடையநாட்டைவிட்டு வெளியேறியதாகவும், இவர்களில் 10,000பேர் கல்விமான்களும், விஞ்ஞானிகளும், பொறியியல்-தொழில்நுட்பநிபுணர்களுமென்று ''ஸ்டோவா டெமோக்கிறுசியே''எனும் கத்தோலிக்கபத்திரிகையின் ஆசிரியர்கூறுகின்றார்.

பிரான்சிய தேசிய நூல்நிலையத்திலுள்ள ஒரு புத்தகத்துக்கு மனித தோல்கொண்டு மேலுறை இடப்பட்டிருக்கிறது. கமில் பிளாமிரி என்ற வானசாஸ்திரி எழுதிய இப்புத்தகத்துக்கு மேலுறையாக அவர்மேல் கொண்ட பற்றுதல் காரணமாகத் தனது மரணத்திற்குப்பிறகு தன்னுடைய தோல் இடப்பட வேண்டுமென்று அதனை மரணசாதனம் செய்திருந்தாள் ஒருபெண்மணி.

''விசுவாச ஆண்டு'' முடிவின் ஞாபகார்த்தமாக வத்திக்கானில் பணியாற்றும் சகலருக்கும் 30பவுண் போனஸ் வழங்குமாறு பாப்பரசர் உத்தரவிட்டிருக்கிறார். பரிசுத்த ஸ்தானத்தின் பல்வேறு நிர்வாகப் பகுதிகளுக்கும் தலைமைதாங்கும் கருதினால்மார், சுவிஸ்காவலர், பாப்பரசின் பொலிஸ்படைவீரர், வாயில்காப்போர், மற்றும்ஊழியர்கள் யாவரும் இவர்களில் அடங்குவார்கள்.

பிரான்சிலே அமெரிக்கஸ்தானிகராக இருந்துவருகின்ற திரு. சார்ஜென்ற் ஷிறிவர்அவர்களுக்குப் பரீஸ் நகர் நோட்றேடாம் சர்வகலாசாலை தனது அதிகம்உயர்ந்த மகிமைவிருதாகிய லேராறேஎன்ற விருதைச் சென்றமாதம் 21ஆம்திகதி சந்மானித்திருக்கின்றது. இவர் காலஞ்சென்ற அமெரிக்கஜனாதிபதி கென்னடிஅவர்களின் சகோதரியின்நாயகர்.

'' அப்பொலோ -7''என்ற விண்வெளிக்கப்பலில் சென்ற 11ந்தேதி வெள்ளிக்கிழமை மூன்று விண்வெளி வீரர்களை அமெரிக்கா விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. வால்ற்றர் ஷிறு, டொன் எய்சல், வால்றறர் கன்னிங்காம் என்பவர்களே மூன்று விண்வெளிவீரர்களுமாவர். இவர்கள் 169முறை பூமியை வலம்வரத் திட்டமிட்டுள்ளார்கள். மொத்தமாகப் 11நாட்கள் இந்த விண்வெளிக்கப்பல் விண்வெளியில் சுற்றியபின் பத்திரமாகப் பூமியில்வந்து இறங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவே உலகின் மிகநீண்ட விண்வெளிப் பயணமாகும். சந்திரனில் மனிதனை இறங்கச்செய்யும் முயற்சியிலே அமெரிக்காவின் வெற்றிக்கு இம்முயற்சி வெற்றியளிக்குமிடத்து அடுத்த கிறிஸ்மஸின்போது சந்திரனைச் சுற்றிவரக்கூடிய விண்வெளி வீரர்களுடன் ஒரு விண்வெளிக்கப்பல் அனுப்பப்படும்.

---

## வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி

காலம்: 20-10-68.
நேரம்: பி. ப. 7-00—7-30 வரை
திருமறைக் கலாமன்றம் தயாரித்த

**"அமலன் காட்டிய வழி"**

என்னும் சுவிசேஷ
இசை — உரை — நாடகச் சித்திரம்.
எழுதியவர்: நீ. மரிய சேவியர்.

---

## புனிதர் பிரான்சீஸ்குவின் மூன்றும் சபை

புனிதர் பிரான்சீஸ்குவின் மூன்றும் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் (போயாமுன்தினம் கிறிஸ்து தேவராசா திருநாளாயிருப்பதால்) 28ஆந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாகி நடந்தேறும். அங்கத்தவர்கள் யாவரும் நேரத்துடன் சமுகமாகுமாறு கேட்கப்படுகிறார்கள்.

அ. பி. முத்தையா (யோசவ்)
சபைக்கர்த்தருக்காக.

---

## அர்ச். வினசென்ற் டீ போல் தருமசபை

அர்ச். வின்செனற் டீபோல் தருமசபைப் பந்திகளின் 3-ம்கால்வருடப் பொதுக்கூட்டம் இம்மாதம் 20-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை (போயாதினம்) பி ப. 5மணிக்கு சகோதரர் எஸ். எம். ஜே. லூயிஸ் அவர்களின் தலைமையின்கீழ் சஞ்சுசைடப்பர் பர்திச்சாலையில் ஆரம்பமாகிநடந்தேறும். சங். விற. இம்மானுவல் அவர்கள் உபந்நியாசம் நிகழ்த்துவார். ஆகையால் அங்கத்தவர்கள் எல்லோரும் நேரகாலத்தோடு சமுகமளிக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

A. S. FRANCIS of MARY
தனிச்சங்க காரியதரிசி.

---

✝

## வில்பத்து ரெயில் விபத்து 4-ம்வருட ஞாபகம்

சவிரியாச்சி இம்மானுவேல்
தோற்றம்: 6-6-1901.
அன்ரோனியா
இந்திரா இம்மானுவேல் Bsc.
தோற்றம்: 27-2-1941
மறைவு: 17-10-1964

''சீவியத்தில் இவர்களை நேசித்தோம் மரணத்திலும் மறவோம்''

எங்கள் குடும்பத்தின் ஜெகஜோதியாய்ப் பிரகாசித்து எங்களால் மிகவும் நேசிக்கப் பட்டவர்களும், உயிர்நீத்தும் எங்கள் மனதைவிட்டு நிமிடமேனும் அகலாத எங்கள் அருமைப் பெருமையான சவிரியாச்சியும், இந்திராவும் இறைவனடி சேர்ந்த நாலாம்வருடம் 17-10-68-ல் பூர்த்தியாவதால் இதனைக் கண்ணுறும் சகலரையும் இவர்கள் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு தயவாய்க் கேட்கின்றோம்.

இவர்கள் பிரிவால் மனம் வருந்தும்:
பத்தாவும் தந்தையுமான—
வரப்பிரகாசம் இம்மானுவேல்
மகனும் சகோதரனுமாகிய—
வண. பிதா. E. T. சவுந்தரநாயகம்
மகளும் சகோதரியுமாகிய—
ஆன் லூட்ஸ் தம்பு
மருமகனும் மைத்துனருமாகிய—
பொஞ்ஜின் தம்பு — பிள்ளைகள்.

---

### நன்றியறிதல்

நான் வேண்டிக்கொண்ட சகாயங்களைப் பெற்றுத் தந்தமைக்காக புனித அந்தோனியாருக்கும் வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதாவுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கும்பொருட்டு இதைப் பிரசுரிக்கின்றேன்.

ஓர் அடியாள்
யாழ்ப்பாணம். 166-68

---

## கோர்ட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 9211

ஸ்ரேசன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
சவரிமுத்து அமுதராஜா
— வழக்காளி

எதிராக

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
பொன்னையன் தம்பையா
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 9211ஆம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1968ஆம் ௵ மார்கழி ௴ 3-ந்உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,480உம், 1-7-67தொடக்கம் 2-4-68 வரைக்கும் ரூபா 2,000-க்குப் 12வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவும். அதாவது 194 ரூபா 45 சதம் ஏற்பட்டசெலவு; 60ரூபா 25சதம் வெலியாத்துச்செலவும், 51ரூபா 20சதம் இனிமேல் வரும்செலவும், மொத்தம் 205ரூபா 70சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று, சுண்டிக்குளி பறுகுகாடு இறை, "றக்கான் தோட்டமும், நீலன் தறையும்" நிலப்பரப்பு $4\frac{15}{32}$. குசினியும், கிணறும், அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு— தம்பு முத்துக்குமாருவுடைய ஆதனம். வடக்கு— கதிரவேலு சின்னையாவுக்கும், மனைவி எலனுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு— சிவபாக்கியம் எதிராளியின் மனைவியுடைய ஆதனம். தெற்கு — றெயில்வேப் பாதை.

கிழக்கு மேற்குப்பக்கக் காணிக்காரரின் மேற்குறிக்கப்பட்ட கிணற்றின்பங்கு பிறநீங்கலாக இது அடங்கலும்.

எ.பி. பி. எதிர்மன்னசிங்கம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
107, பெரியதெரு,
யாழ்ப்பாணம், 14-10-68.
165/68.

---

✝

## 4-ம் வருட ஞாபகம்

**திரு. மத்தியாஸ் செபமாலை**
(நல்லையா) அவர்கள்

தோற்றம்: 26-7-64
மறைவு: 23-10-64

''காலையில் மலர்ந்து மாலையில் குவியும் மலர்போல் என்வாழ்வு மறைந்தாயிற்று. சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்''

திரு. மத்தியாஸ் செபமாலை (நல்லையா) அகால மரணமடைந்த நான்காவது வருடம் 23-10-68-ல் பூர்த்தியாகிறது. எனவே அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி வண. குருமார், சங். கன்னியர், விசுவாசிகள் சகலரையும் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்: மனைவி மக்கள், உறவினர். 166|68.

---

### நன்றித்துதி

பரிசுத்த சதாசகாயமாதாவின் மன்றுட்டினாலும் அவர் திருத்தாயார் அர்ச். அன்னம்மாளின் வேண்டுதலினாலும், எனது இளையசகோதரன் பெரியஆபத்திலிருந்து மனம்திரும்பியதற்காக எனது தாழ்மையானநன்றி வணக்கத்தை தெரிவிப்பதுடன் எங்கள் குடும்பநலனுக்காகவும் பிரார்த்திக்கிறேன். மரியாயே வாழ்க.

திரேசம்மாள் லம்பேட்,
பேசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாதத்தில் ……

ஐப்பசிமாதம் ஓடிக்கொண்டிருக்கிறது. விரைவில் அதுவும் முடிந்துவிடும். இம்மாதத்திற்கென திருச்சபையில் ஒருவிசேஷபக்தி. அல்லது ஒரு பக்திக்காக ஒரு மாதத்தைத் திருச்சபை விசேஷமாக ஒதுக்கிவைத்திருக்கிறதென்றும் கூறலாம். அதுதான் திருச்செபமாலைப்பக்தி.

இப்பக்தியில் ஒரு செபத்தை மற்றவைகளைவிட அதிகமாக—திரும்பத் திரும்பச்—சொல்லுகிறோம். அல்லது தியானிக்கிறோம். அதுதான் "அருள் நிறைந்த மரியாயே வாழ்க!" என்ற செபம். செபமாலையைச் செபிக்கும்போது நாம் "அருள்நிறைந்தமரியாயே வாழ்க" என்ற செபத்தை நூற்று ஐம்பத்துமூன்றுமுறை வாயினால் செபிக்கிறோம். ஆனால், அதை வாயினால் உச்சரிப்பதோடில்லாமல் மனத்தாலும் தியானிக்கிறோம். தியானிக்க வேண்டும் என்று கூறுவது மிகப் பொருத்தமானது.

ஏன் ஒரேயொரு செபத்தைத் திரும்பத் திரும்பச் செபிக்கவேண்டும்? "அருள் நிறைந்த மரியாயே வாழ்க" என்ற செபத்தைச் செபிக்கும்போது, நாம் தேவதாயை, நம் தாயைப் புகழ்கிறோம். தேவனின் அதிஉன்னத படைப்பாகிய மரியாளைப் புகழ்வதோடு அதன் வழியாகத் தேவனுக்கும் மகிமை செலுத்துகிறோம். இதைப் பற்றிச் சற்றுவிரிவாக அறிந்துகொள்வது நன்று.

இச்செபத்தில் இரண்டு தரப்பட்ட பிரிவுகளை நாம் அவதானிக்கவேண்டும். ஒன்று: புகழ்ச்சிகூறுதல்; மற்றது: விண்ணப்பித்தல். முதலாவதில்—புகழ்ச்சி கூறுகையில்—இருதரப்பட்டவர்களின் புகழ்ச்சிகளைக் கூறுகிறோம். ஒன்று தேவனின்புகழ்ச்சி, மற்றது மனிதனின்புகழ்ச்சி. இவற்றை நாம் "நற்செய்தி ஏட்டிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். அதாவது: "பிரியதத்தத்தினாலே பூரணமா

**யோ. ஜூலியஸ் இராசையா**

னவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே; ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே (லூக்கா. 1: 28); உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே (லூக்கா 1: 42). இதில் நாம் சேர்த்துச்சொல்லும் "யேசுவும்" என்றபதம் நான்காவது ஊர்பன் பாப்பிறையால் புகுத்தப்பட்டது. இறுதியாக நாம்கோரும் விண்ணப்பம் திருச்சபையினால் சேர்க்கப்பட்டது. (தற்பொழுது இச்செபத்திலுள்ள சிலபதங்களுக்கு வேறு சொற்கள் பாவிக்கப்படுகின்றன. என்றாலும் கருத்து ஒன்றே).

இச்செபத்தைத் திரும்பத்திரும்பச் செபிப்பதற்கு அவசியமென்ன? இதற்குப் பதிலாக, நாம் நம் அன்னையர்களை ஒருநாளையில் எத்தனைதடவைகள் அம்மா! அம்மா! என்று அழைக்கிறோம்? ஏன் அப்படி அழைக்கிறோம்? என்ற வினுக்களின் பதில்களையே, நம்முந்திய கேள்விக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளவேண்டும். "அம்மா" என்ற சொல் எப்படி அதைக் கூறுபவர் வாயிலும் அதைக்கேட்பவர்கள் செவிகளிலும் அமுதத்தைப் பொழிகிறதோ, அதேபோல் இச்செபமும் அதைக்கூறும் நம்முடைய உள்ளங்களில் அக்களிப்பையும் அதைக் கேட்கும் நம் தேவ அன்னைக்கு மகிழ்ச்சியையும் உண்டுபண்ணவல்லது எப்படி?

நாம் ஒருபெரியாரைப் புகழும்போது அவருடைய அரும்பெரும் நலன்களை, சாதனைகளை எடுத்துக்கூறியல்லவா புகழுகிறோம். அதேபோல் நம் தேவஅன்னையின பெருமைகளைக் கூறுவதே நாம் அவளைப் புகழுவதற்குப் பொருத்தமானமுறை. தேவஅன்னையின் பெருமைகளை திருச்சபையின் பிதாப்பிதாக்களும், வேதபாரகரும் வியாக்கியானம் செய்ததை நாம்வாசிக்கிறோம். சிறந்த அறிஞர்கள் அவற்றைப் பிரஸ்தாபிக்கக் கேட்கிறோம். ஆனால், மானிடரின் இப்புகழெல்லாம் நம் தேவ அன்னை அடைந்திருக்கும் மகிமையோடு ஒப்பிடும்போது சமுத்திரத்தின் ஒருதுளிநீர்போன்றது.

நம் தேவ அன்னை மாசற்றவளாக உற்பவித்து, பாவநிழலே அணுகாதவளாய், கன்னிமை கெடாதவளாய்ச் சீவித்து, ஈற்றில் ஆத்துமசரீரத்தோடு மோட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள் என்பது உண்மை; விசுவாச சத்தியம். இவ்வுன்னத நிலையில் கடவுளின் படைப்புக்களில் வேறெவரும் நிலைத்திருந்ததில்லை. மரியாள்—வரப்பிரசாதங்களின் சமுத்திரம்— மாத்திரமே தேவனோடு என்றும் ஐக்கியமாயிருக்கிறாள். இவ்வுன்னத அந்தஸ்து தேவனால் மரியாளுக்கு மாத்திரமே அருளப்பட்டிருக்கிறது. இப்பெருமையை, தனிச்சிறப்பை, தேவன்தாமே மனிதருக்கு வெளிப்படுத்துகிறார். அவர் தமது தூதர்களில் ஒருவரை மரியாளிடம் அனுப்பி, தான்மரியாளுக்குச் செய்துள்ள விசேஷசலுகையை அவளுக்கும், நமக்கும் எடுத்துக்கூறும்படி பணிக்கிறார். தேவதூதனும்-கபிரியேல்—தூதாக மரியாளிடம் வந்துசேர்கிறார். அவள் முன் நிலையில்பக்தி ஆசாரத்தோடு காணப்படுகிறார். அவளை விழித்து "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே, ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்கிறார். தேவன் தன்னுடைய தூதனை இப்பூவுலகிற்கு அனுப்பி தன்னுடைய படைப்புக்களின் ஒன்றின்மேல் தாம் கொண்டுள்ள பூரணதிருப்தியை உலகமறிய விளம்பரம் செய்கிறார். தேவன்தாமே மரியாளுக்குச் சாற்றிய புகழ்மாலையை மிஞ்சியபுகழும் இருக்கக் கூடுமா, இப்படியான ஒரு புகழ்மாலையைப் பெறும் பாக்கியத்தை தேவதாயைத் தவிர வேறுயார்தான் பெற்றிருக்கிறார்கள்? தேவன் மரியாளுக்கும் அவள் மூலமாய் நமக்கும் செய்தவைகளை நாம் பாராட்டாமல் இருக்கலாமோ?

தேவன் சாற்றிய புகழைத்தொடர்ந்து மனுக்குலத்தின் சார்பில், மரியாளின் பந்துவாகிய எலிசபேத், மரியாளைப்புகழ்ந்து, "ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே! உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே" என்கிறாள்.

மரியாள் தேவனின் தாயாகுவதற்காகத்தான் தேவனால் சகலவரப்பிரசாதங்களினாலும் நிரப்பப்பட்டாள். மரியாள் தேவனின்—கிறிஸ்துவின்—தாயாகியபடியால்தான் அவள் மனுக்குலத்தின்தாயாக நியமிக்கப்பட்டாள். இதையிட்டு மனுக்குலம் காலாகாலத்திற்கும் அக்களிக்கும். மரியாளும் இதை முன்னறிவித்தலாக அறிந்திருந்தாள். மரியாள் தேவனுக்குச்சாற்றிய புகழ்மாலையில், "இதோ இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப்பாக்கியவதி என்பார்கள்" என்கிறாள்.

இதுவரையும் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்தேறியது ஒரே ஒருகாரணத்திற்காகத்தான். அதாவது பாவத்தினால் பசாசின் அடிமையாயிருந்த மனுக்குலத்தை மீட்டுஇரட்சிக்க ஓர் இரட்சகர் பூவுலகத்திற்கு வரவேண்டியதாயிருந்தது. தேவனும் தாம் தாமே நிர்ணயித்தபடி பூவுலகத்திற்கு வந்தார். நம்மை மீட்டு இரட்சித்தார். ஆனால், இக்கைங்கரியத்தில் நமக்கும் ஒரு முக்கிய பங்கை விட்டு வைத்திருக்கிறார். கிறிஸ்துநாதருடைய பெறுபேறுகளினால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், அப்பெறுபேறுகள் நம்மில் பலிக்கச் செய்வதற்கு நம்முடைய சொந்த முயற்சியும் அத்தியாவசியம். கிறிஸ்துநாதருடைய பாடுகளினாலும், மரணத்தினாலும், உத்தானத்தினாலும் பாவம் நம்மேல் செலுத்திவந்த ஆதிக்கம் தகர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், பாவப்பற்றுதல்கள் நம்மிடமிருந்து அறுக்கப்படவில்லை. இதைநாமே செய்யவேண்டும். நாம் பாவத்தினின்று காக்கப்பட தேவதாயின் உதவி நமக்கு அத்தியாவசியம் என்று நாம் உணர்ந்து அவளுடைய உதவியை எப்பொழுதும் வேண்டவேண்டும் என்பதற்காகத்தான், நம் மாதாவாகிய திருச்சபையும் "அர்ச். மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்" என்ற மன்றாட்டையும் இறுதியில் சேர்த்திருக்கிறது.

பரிசுத்த செபமாலைப் பக்தியை நாம் அனுசரிப்பதனால் நம் இரட்சணியத்தைப்பற்றிக் கணணும் கருத்துமாய் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நம் பரிசுத்த மாதாவாகிய திருச்சபை இப்பக்தியை மக்கள் மத்தியில் பரப்பி வந்தது.

இன்னும்—செபமாலையைச் செபிக்கும்போது நாம் சொல்லும் "கர்த்தரின் செபமும்" நாம் நம் ஆத்துமத்தை ஈடேற்ற வேண்டியதன் அவசியத்தை நமக்கு நினைவூட்டுகின்றது.

இவற்றோடு நாம் தியானிக்க ஏவப்படுகின்ற நம் இரட்சகரின் சீவியமும்—அவருடைய பிறப்பு — பாடுகள் — மரணம்—உத்தானம்—பரலோக ஆரோகணம் முதலியன, நம் இரட்சணியத்திற்காகத் தேவனே என்னென்ன செய்தார் என்று நமக்கு நினைவூட்டி, அவைகளின் பெறுபேறுகளை நாம் அடைந்துகொள்ள முயற்சிக்கவேண்டுமென்று நம்மை ஏவுகின்றன.

இவைகளை அடிப்படையாகக் கொண்டு, ஐப்பசி மாதத்தில் விசேஷ பக்தியோடு செபமாலையைச் செபிப்பதற்கு நம்மைத்தூண்ட இன்னுமொரு காரணமும் இருக்கிறது. திருவழிபாட்டுச்சக்கரத்தில் நம்முடைய

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

**விற்பனைக்கு :**

திருப்பலி பூசையின்போது
தினசரி உபயோகிக்கும்

**பூசைச் செபங்கள்**

எனும் புத்தகம் பூசைப் பாடல்களையும் உள்ளடக்கியதாய்ப் புதிதாக வெளிவந்துள்ளது.

தேவையானோர் கீழ்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

## செப்பரிய ஒப்பரிய மாலையது

-( பாக்கியம் )-

மாலைகளிற் பேர்போன மாலையது
மரியாயின் நாமமுள மாலையது
மாலைநேரம் நாம்செபிக்கும் மாலையது
மணிமணியாய் நாம்சொல்லும் மாலையது
வேலைவிட்டு வீட்டினைநாம் செல்லும்போதும்
விரும்பியேநாம் சொல்லிடும்நல் மாலையது
சோலைகளிற் செல்லும்போதும் சொல்லநல்ல
செப்பரிய ஒப்பரிய மாலையது.

பேய்களையும் பயப்படுத்தும் மாலையது
பெண்களவர் ஓதிடும்நல் மாலையது
வாய்களினால் மரியாயைப் போற்றநல்ல
வளமான இனியநல்ல மாலையது
தாய்களையும் தனிமையிற் செபிக்கஏவும்
தனிப்பெரிய பண்புடைய மாலையது
சேய்களையும் தனதண்டை கூட்டும்நல்ல
செப்பரிய ஒப்பரிய மாலையது.

மரியாயின் புகழ்கூறும் மாலையது
மானிலத்தில் மானிடனாய் வந்தயேசு
மரியாயின் உதரத்தில் உதித்ததையும்
மண்ணுலகிற் பாடுபட்டு இறந்ததையும்
பரிகாரம் செய்தபின்பு மோட்சமேகிப்
பண்புடனே பிதாவின்வலம் இருந்ததையும்
அரிதாக நமக்கெடுத்துக் கூறும்நல்ல
செப்பரிய ஒப்பரிய மாலையது.

பாவிகளாய்ப் பாரதனிற் பிறந்தநாங்கள்
பயபக்தி அன்புகொண்டு ஒன்றுகூடிப்
பாவிகட்காய்ப் பரிந்துபேசும் தாயிடமே
பணிவுடனே முழங்காலில் இருந்துகொண்டு
பாவிகள்நாம் என்றுதானே ஏற்றுக்கொண்டு
பரமனிடம் எமக்காக என்றும்வேண்டிச்
சாவிலும்நாம் மன்றாட்டைப் பெறச்செய்யும்
செப்பரிய ஒப்பரிய மாலையது.

செபமாலை எனப்பெயர்கொள் மாலையது
செபமதனைச் சொல்லிடநல் மாலையது
தபவேடம் தாங்கியவர் மாலையது
தாசர்களை அழைக்கும்நல் மாலையது
சுபமாக மாதாபக்தர் எப்பொழுதும்
நவமான பாக்கள்பாடும் மாலையது
செபமாலை மாதாவின் மாலையது
செப்பரிய ஒப்பரிய மாலையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஐப்பசி—1968.**

| | | | |
|---|---|---|---|
| 20 | ஞா. | பரிசுத்த ஆவி விழாவுக்குப் பின் 20-ம்ஞாயிறு | [ப] |
| 21 | தி. | கிழமைப் பூசை | [ப] |
| 22 | செ. | கிழமைப் பூசை | [ப] |
| 23 | பு. | புனித அந்தோனி மரிய கிளாறெற் | [வெ] |
| 24 | வி. | புனித இராபாயேல் அதிதூதர் | [வெ] |
| 25 | வெ. | கிழமைப் பூசை | [ப] |
| 26 | ச. | சனிக்கிழமையில் புனித மரியன்னையின் பூசை | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம் ஸு ஐப்பசி மீ 19-ங்உ


## மிஷன் ஞாயிறும் எமது கடமையும்

கிறிஸ்துநாதர் தமது போதனைகள் அனைத்தையும் இரு பெரும் கட்டளைகளுள், அதாவது தேவ தேவசிநேகம் பிறசிநேகம் என்பனவற்றுள் அடக்கிவிட்டார். அவரது கருத்தைத் தவருக விளங்கிக் கொள்ளாதபடிக்கு நல்ல சமாரியனின் உவமைமூலம் எமது அயலவர் யார் என்பதையும் எடுத்து விளக்கினர்.

பிறரை நேசிக்கும் உன்னதமான வழி நாம் அடைந்த பாக்கியத்தை அவரும் அடையச் செய்வதே. நாம் விசுவாசத்தின் ஒளியையும், கிறிஸ்துவின் மீட்பையும் பெற்றுள்ளோம். பிறரும் இவற்றை அடைந்து ஈடேறும்படி உழைப்பது ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனதும் பாரதூரமான கடமையாகும். வேதபோதக அலுவலில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்குபற்ருதவன் முழுமையான கிறிஸ்தவன் அல்ல.

ஒருவன் விசாரணைப் பங்கின் அங்கத்தவன் மட்டுமல்ல, அனைத்துலக திருச்சபையின் அங்கத்தவனுமாவான். கிறிஸ்து எங்ஙனம் வாழ்ந்தார் என்பதை அறிந்தால் போதாது. எமது சகோதரர் எங்ஙனம் வாழ்கிருர்கள் என்பதிலும் கரிசனை எடுக்கவேண்டும். அவர்களைக் கடந்து செல்லாது, அவர்களையும் அழைத்துக்கொண்டே கிறிஸ்து நாதரிடம் கரங்களை நீட்டவேண்டும். கிறிஸ்தவராகிய நாம் மனிதனது நிலையில் அக்கறை எடுக்காது இறைவனை அடைய முடியாது.

இறைவன் தமது பரம அன்பின் மூலம் மனிதப் பிறவி எடுத்தவர் ஒவ்வொருவரையும் தம்மோடு இணைத்துக் கொள்கிருர். இந்தப் பரம அன்பை அவர்கள் உணராது வாழவிடலாமா? கிறிஸ்துநாதர் உபதேசம் செய்தபோது மக்கள் அவரது அன்பை உணர்ந்தனர். அவர் சகலருக்காகவுமே அவதரித்தார். ஏழைகள், நோயாளிகள், பசித்தோர், குஷ்டரோகிகள் மத்தியில் அவர் வசித்து, அவர்கள் எல்லாரையும் நேசித்தார். அவர்களின் ஆன்ம சரீர நலனில் கரிசனை எடுத்தார்.

நாம் மனித சுபாவத்தின் மூலமாக சகல மனிதருடனும் இணைக்கப்பட்டிருக்கிறோம். எனவே, மனுக்குலத்தின் ஆன்ம சரீர அபிவிருத்திக்காகச் சில செபங்களைச் சொல்லும்போது அல்லது சில நாணயங்களை அளிக்கும்போது அது வெறும் கடமைமட்டுமல்ல, அர்த்தம் பொதிந்ததொரு செயலுமாகும். எம் அயலாரோடும், இறைவனேடும் நாம் கொண்டுள்ள உறவை இது எடுத்துக்காட்டுகிறது. கிறிஸ்துநாதர் அன்று காட்டியதுபோல, இன்று அவரது அன்பை உலகுக்கு எடுத்துக் காட்டுபவர் மூலம் அவர் தம்மை வெளிப்படுத்துகிருர்.

ஆன்மீக அபிவிருத்தி தனித்து நிகழ்வதல்ல. கிறிஸ்துநாதர் மக்களின் உடல்நலனைக் கருதாது விடவில்லை. பசியிலும், நோயிலும், அறியாமையிலும் உழல்பவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தால் மட்டும் அது அவனை உயர்ந்த வாழ்வுக்கு இட்டுச்செல்லாது. முழு மனிதனின் அபிவிருத்தியும் ஒருங்கே நிகழவேண்டும். வேதபோதகர் பிரசங்கித்துவிட்டு பணிசெய்யாதிருக்க முடியுமா? பசியால் வாடியிருக்கும் உடலுக்கு போஷணை அளிக்காமல் ஆன்மாவைப் போஷிக்க முடியுமா? எனவே மக்கள் வாழ்க்கைத் தரத்தையும், ஒழுக்க நிலையையும்உயர்த்தி, அறிவை வளர்த்தால் தான் அவர்களது ஆன்ம வளர்ச்சி தடைபடாது நிகழமுடியும். இத்தகைய சூழ்நிலையில் வேதபோதகர் சமய குருவாக மட்டுமல்ல, ஒரு நண்பனுக, ஆசிரியனுக, அன்னதாதாவாக, வைத்தியனுக, சிற்பியாக பணிபுரிய வேண்டியிருக்கிறது. இதற்குவேண்டிய மூலதனத்திற்கு எம்மையே நம்பியிருக்கின்றனர். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள மக்கள் தாம் பூரண வளர்ச்சி அடைவதற்கு துணைபுரிவோரைத் தேடி நிற்கின்றனர். கிறிஸ்தவராகிய நாம் அவர்களைத் தவிக்கவிடலாமா?

## சமூக-பொருளாதார முன்னேற்ற வேலைகளில் திருச்சபையின் பங்கு ஆராயப்படுகிறது

சென்ற சனி, ஞாயிறுதினங்களில் கொழும்பில் மேலும் ஒரு முக்கியமான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது — அதில் ஒவ்வொருநாட்டிலும் அந்நாட்டினசமூக — பொருளாதார முன்னேற்றவேலைகளில் திருச்சபை எவ்வாறு பங்குபெற்றுக் கொள்ளவேண்டும் என்ற கருமம் ஆராயப்பட்டது. இந்த ஆலோசனைக்கூட்டத்தில் சந்நியாசசபை கன்னியர்சபைத் தலைவர்களும் இல்லற கத்தோலிக்கர்களில் சமூக தொண்டுத் தலைவர்களும் பங்கு பெற்றுக் கொண்டனர். ஆலோசனைகளை வழிப்படுத்தும் பங்கு பிரான்சுதேச லூவேன்நகர சர்வ கலாசாலைச் சமூகக்கலைப் பேராசிரியராகிய கூலாட் அடிகளாரது பொறுப்பில் விடப்பட்டிருந்தது. இலங்கையில், அரசாங்கத்துடன் எவ்வளவு ஒத்துழைத்து சமூக—பொருளாதார வேலைகளில் கத்தோலிக்கர் முன்னேற்றத்துக்கு உழைக்கலாம் என்னும் கருமம் நுட்பமாக ஆராயப்பட்டது. சிலவாரங்களுக்கு முன் இலங்கைக்கு விஜயம்செய்த யேசுசபை ஆலோசகராகிய லின் அடிகளாரும் கத்தோலிக்கர் நாட்டின் பொருளாதார வேலைகளில் துரிதமாக ஈடுபடவேண்டுமென்பதை வற்புறுத்திச் சென்ருர்.



# பரி. தந்தை பாப்பு 6-வ

## கிறிஸ்துநாதரில் அன்பார்ந்த எமது சகோதர கு
## கத்தோலிக்க திருச்சபையின் புத்திரர் புத்திரிகளு

## வேதபோதக நாடுகளின் நேரம் வந்துவிட்டது

இற்றைக்குச் சிலகாலமாக அகில உலகிலும வருடந்தோறும அனுசரிக்கப்பட்டுவந்த விசுவாசப்பரம்புதல் ஞாயிறுனது இவ்வருடம் ஐப்பசி மாதம 20-ம் திகதியில் வருகிறது. விசுவாசிகளின் இருதயங்களைத் திரும்பவும் பக்திவேகமுள்ளவையாக்கி, மறைபரப்புப்பணியில் அவர்களுக்குள்ள கடமைகளை உணர்ந்துகொள்ளச்செய்வதற்கு இது ஓர் அரியசந்தர்ப்பமாகும. மண்ணிலே நிகழும் திருச்சபை இயல்பிலேயே மறைபரப்புப்பணியைக் கொண்டுள்ளது. இப்பணியைத் தொடர்ந்து நடத்துவதாயிருக்கிறது கிறிஸ்துவின் கத்தோலிக்க திருச்சபை. உதாரணமாக அது முழுஉலகிற்கும் உரியது. தனது உரிமைகள் கடமைகளாலும், முறைமையாகத் தொடர்ந்துவரும் அதிகார வரிசையாலும் பாம்பரையான உண்மைச் சரித்திர வரலாற்றைக் கொண்டுள்ளது. மனிதவரலாற்றிலே கடவுள் மறைபாப்புப்பணியால் மீட்பு வரலாற்றை வெளியரங்கமாக நிறைவேற்றித் தமது திட்டத்துக்குச் சாட்சிபகர்கிருர். ஆட்சிபுரியவோ அல்லது உலகப்பெரும நகரங்களைத் தனது ஆதிக்கத்தின்கீழ்க்கொண்டு வருவதற்கோ திருச்சபை அழைக்கப்படவில்லை. ஆனால, அதற்குமாருகக் கிறிஸ்தவ பாமஅன்பால் நிரப்பப்பட்டு நேரிய உள்ளத்தோடும் கடமைஉணர்வோடும், தனது பிரமாணிக்கமான சேவையால் மனிதர்க்குப் பணிபுரிவதைத் தவிர வேறு எந்த அதிகாரத்தையும் அது தனக்கெனக் கொள்ளவில்லை. அதுமட்டுமன்றிச் சமய ஒற்றுமையைத்தூண்டி, சன்மார்க்க—பண்பாட்டுக்கலாசார— அரசியல் வேற்றுமைகளுக்குச் சுயமதிப்புக்கொடுத்து, மனிதரனைவரையும காணக்கூடிய ஒரே சகோதரத்துவமாக ஒரே மக்களாக, ஒரே குழுவாகக் கூட்டிச் சேர்க்கத் தனது வேதபோதகப்பணியால் வழிதிறக்கிறது. திருச்சபையானது ஒரு ஸ்தாபனம் என்றமட்டில் பொதுவாய் இருப்பது மாத்திரமன்றி, உண்மையிலேயே அது தன் பெயருக்கிசைய ஒரு கத்தோலிக்க ஸ்தாபனமாகவும் விளங்கவேண்டும். தான் தாங்கியிருக்கும் இத்தெய்வீக நோக்கங்களால திருச்சபையானது அண்மைக்காலத்தில துயிலெழுப்பப்பட்டதுடன் நின்றுவிடாது, மேலும் இந்நோக்கங்களைப்பற்றி அதிகம் சிந்திப்பதாயிற்று.

இன்று பாரெங்கும் பெரும்மாற்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 'பிறரனபின அவசியம்'பற்றி ஆழ உணர்ந்துள்ள திருச்சபையானது, உண்மையில தனது மறைபரப்புப்பணியின் வழியாக மறுமலர்ச்சிப்பாதையில் விரைந்துகொண்டிருக்கிறது. "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாவிட்டால் ஐயோ எனக்குக் கேடாம்" (I கொரி. 9—16) என்று புனித சின்னப்பர் மொழிந்த வாக்கியங்கள் திருச்சபையில் எதிரொலித்து, மறைபரப்புப்பணியின ஆரம்ப அழைத்தலை இன்றும் எமக்கு நினைப்பூட்டுகின்றன. வேதபோதகநாடுகளின கடந்தசில நூற்றுண்டுகாலவரலாறு இதை எண்பிக்கின்றது. மறைப்போதகர்கள் மேற்கொண்ட மிகவீரியமான முயற்சிகள் எத்தனை ஆபத்துநிறைந்த, துணிகரமான வீரம்நிறைந்த வேதசாட்சித்தனத்தை வேண்டிநின்றன? மிகச்சிறந்த வழிவகைகளைக்கையாண்டு மனிதன் தனது மனவுறுதி என்ற ஆயுதத்தின்மூலம், அன்பினுல் உந்தப்பட்டு இத்தனை கடினமான பிரயாசைகளை மேற்கொண்டான் எனச் சிலர் சொல்லக்கூடும். ஆனால், உண்மையான விசுவாசத்தின் இயல்பு எவ்வாறிருக்க வேண்டுமோ, அதுதான் மேற்படி மறைப்போதகர்களைத் துணிகரமாக வழிநடத்திச் சென்றதேயன்றி மற்றப்படியல்ல. சுவிசேஷ நற்செய்தியைப் பரப்புவதில் அவர்களுக்கிருந்த உள்ளக்களிப்பின் ஆர்வமானது அவர்கள் மேற்கொண்ட எவ்வித முயற்சிகளுக்கும பரித்தியாகங்களுக்கும் சம்பாவனையளித்தது.

குறிப்பிடத்தக்க இக்கோட்பாடுகளின் அடிப்படை உண்மைகளைத் தெளிவாக்குமபொருட்டு அமைந்தது தான் கடந்த 2-வது வத்திக்கான் பொதுச்சங்கம. எவ்வாறெனில் இறைவன்மாட்டு இறைமக்களுக்குள்ள கடமைகளை நினைப்பூட்டி, கிறிஸ்துவின் நாமத்தை அறியாமலும், திருச்சபையில் இன்னும் வேரூன்றுமலும் இருக்கும் மக்களுக்கு, சுவிசேஷ நற்செய்தியை அறிவிக்கும் பணியை ஊக்கத்துடன் மேற்கொள்வதும், மறைபரப்புப்பணியின் பல்வேறுபட்ட நிலைகளிலும் எவ்வாறு பணிபுரிய வேண்டுமென்பதும் மேற்படி பொதுச்சங்கத்தின் கொள்கைத்திரட்டில் தெளிவாகக் காணக்கிடக்கிறது.

அன்பார்ந்த சகோதரரே; பிள்ளைகளே, திருச்சபையின ஏககால வாழ்க்கையின் உருவெளித் தோற்றத்தை வியத்தகுவிதத்தில் விளக்கிக்காட்டும் இக்காட்சியானது மிகுந்தகரிசனையுடனும், கூர்ந்தஆராய்வுடனும் நிதானிக்கப்படத்தக்கதொன்ருகும். கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையின் இந்த வெளிப்படுத்துதலில் வேண்டா வெறுப்புள்ளவர்கள் அல்லது அதிற்பற்றில்லாதவர்கள் கிறிஸ்துவுக்கும் தமது சொந்த ஞானஸ்நான அருட்கொடைக்கும தாம் பிரமாணிக்கம் உள்ளவர்களோ என்பதைக் குறித்து ஐயப்பட இடமுண்டு. எங்கள் ஒவ்



**20-10-68**

**விசுவாசப் பரப்புதல் ஞாயிறு**

விசுவாசப் பரப்புதல்சபைக்கு நீங்கள் மகிழ்ச்சியுடன் அளிக்கும் உதவிகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வண. பிதா அன்ரன் இராசநாயகம்,
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -வது சின்னப்பர் விடுத்த நற்செய்தி

## காதர குருப்பிரசாதிகளுக்கும், பரிசுத்த திரிகளுக்கும் :—

வொருவருக்கும், விசுவாசிகளின் குழு ஒவ்வொன்றுக்கும் வேதபோதகஸ்தாபனங்கள் சொந்தமானவை. நாம் அவற்றிலிருந்து வெகுதூரத்திலிருப்பினும் அவை எமது இருதயத்துக்கு அண்மையில் இருக்கவேண்டும். விசுவாசத்தினதும் பரமஅன்பினதும் ஒருமைப்பாட்டுக்கு அவை எவ்வளவு முக்கியமானவை என்பதை நாம் உணர்ந்தால், வேதபோதகஞாயிறானது எம்ஒவ்வொருவருக்கும் ஆர்வமும் அவதானமும் மிக்க ஒருநாளாயிருக்கும். ஆதலாற்றான் நாம் உமக்கு இச்செய்தியை அறிவிக்கின்றோம்.

அபிவிருத்திப்பாதையில் மிகத்துரிதமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இன்றைய சமுதாயத்திலே, வேதபோதகநாடுகளிற் பணிபுரிவதிலுண்டாகும் பலவிதகஷ்டங்களையும், இக்கஷ்டங்களை மேற்கொண்டு அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பதற்குரிய சிலபுதிய வழிவகைகளையும் பற்றிக்கூற விரும்புகிறோம்.

ஆனால், இன்றையசமுதாயச் சூழ்நிலையிலே மறைபரப்பு அலுவலைப் பற்றிய வேறோர் முக்கியமானதும் அனைவராலும் நன்கறியப்பட்டதுமான வினைக்குரலொன்று கேட்கப்படுகிறது. அது எதுவெனில்—வேதபோதகநாடுகளின் சுயநிறைவடையாத—பற்றாக்குறையான ஒருநிலைபற்றியதாகும். அதாவது; மறைப்போதகர்களினதும் பணஉதவியினதும் தேவைக்குறைவாகும். இவ்விஷயத்தைப்பற்றியே இவ்வேளை பேசுவோம். "கிறிஸ்துவுக்காகவும் ஆன்மாக்களின் மீட்பிற்காகவும் இரவலர்போலிருந்து, அவர்களிடத்திலே இரக்கவும் வெட்கப்படாமலிருக்க வேண்டும்" என்று (திருச்சபையின் மறைபரப்புப் பணிபற்றிய தீர்மானத்தொகுப்பு இல. 39) வத்திக்கான் பொதுச்சங்கம் எமக்கு அறிவுரை கூறியிராவிட்டால் நாமும் நமக்கு இயல்பாயுள்ள மனஅச்சத்தோடும் தளர்ச்சியோடும்தான் இவ்விஷயத்தில் நடந்து கொள்வோம் என்பது தெளிபு.

எவ்விதமாகப்பார்ப்பினும், வேதபோதகநாடுகளின் தேவையோ மிகப்பெரிதென்பது புலனாகும். பாடசாலைகள், வைத்தியசாலைகள், தேவாலயங்கள், செபக்கூடங்கள், தொழுநோய்ஸ்தாபனங்கள், குருமடங்கள், வழிப்போக்கர்விடுதிகள் என்பவற்றை இந்நாடுகள் வேண்டிநிற்கின்றன. இக்கட்டிடங்களை அமைத்து விடுவதில் மாத்திரம் மறைபரப்புப்பணிப்பொறுப்பு நின்றுவிடாது; ஆனால், அக்கட்டிடங்களின் செயற்பாடு, பாதுகாப்பு, தளபாடஉதவி முதலியவற்றின் செலவுக்காக வருடந்தோறும் தேவைப்படும் பெருந்தொகைப்பணத்தைப்பற்றிய கவலைதான் பழுநிறைந்த பாரச்சுமையாயிருக்கிறது.

இந்நோக்கத்திற்காக வேதபோதகநாடுகள்தாமே அளிக்கும் உதவியோ மிகச்சொற்பம். வழக்கமாக இந்நாடுகள் தமது சுயதேவையைப் பூர்த்திசெய்யமுடியாத பின்தங்கியநிலையில், வளர்ச்சியை வேண்டிநிற்கும் நாடுகளாகும். எனவே, இவற்றின் பராமரிப்புப் பொறுப்பானது மேற்றிராசன ஆட்சிப்பீடத்தின்மேற் சுமத்தப்படுகிறது. ஆட்சிக்குழுவினரோவென்றால் சந்தர்ப்பம் இடங்கொடுக்கும் அளவிற்குச்சில நன்கொடையாளரின் அவ்வப்போதைய உதவியில் தங்கியிருக்கின்றனர்.

அன்புள்ள சகோதரரே, மக்களே, தந்தைபாப்புவின் வேதபோதகச்சபைகளின் குறிக்கோளுக்குச் செவிசாய்க்கும்படி உங்களை வேண்டுகிறோம். இவ்விதம் உங்களது பிறரன்பின் ஆதரவில் எமது வேதபோதகச்சபைகளின் நோக்கங்களை வைப்பது வேதபோதகஸ்தாபனங்களில் நாம்கொண்ட தனிப்பட்ட அக்கறையினாலல்லவே. ஆனால், இறைமக்களை அனைத்துலக உணர்விலும் மறைப்போதக உணர்விலும் ஊறியிருக்கச் செய்வதற்கும், அவ்வவற்றின் தேவைக்கேற்ப, எல்லா வேதபோதக நாடுகளுக்கும் தேவையான பணஉதவியைப் பயன்தருமுறையில் பெறுவதற்கும் இவைகள்தான் அத்தியாவசியமான வழிகள் என்பதனாலாம். வத்திக்கான் பொதுச்சங்கமும இதனை உறுதிப்படுத்திக் கூறுவதாவது, "மறைபரப்புச்சபைகளை, சிறப்பாகப் பாப்பரசர் மறைபரப்புச்சபைகளைப் பேணி ஆதரிக்க வேண்டும்" (மறைபரப்புப்பணிபற்றிய தீர்மானத் தொகுப்பு. இல. 38).

பாப்பரசரின் வேதபோதகச் சபைகளான விசுவாசப்பரம்புதற்சபை, புனித இராயப்பர்சபை, திருப்பாலதுவசபை என்பன தமது பங்காக உவந்தளிக்கும் ஆன்ம—சரீர உதவிகள் மூலம், கிறிஸ்துவை இன்னும் விசுவசிக்காத மக்களிடையேயும குழுக்களிடையேயும் அவரின் திருச்சபையை ஸ்தாபிப்பதையே தமது குறிக்கோளாகக்கொண்டு, இறைமக்களை விசுவாசப்பரம்புதற் பணியில் நாட்டங்கொள்ள முயற்சிக்கின்றன. இவ்வித ஒத்துழைப்பையுடைய ஒழுங்குமுறையானது திருச்சபையின் உறுப்பினர் யாவரையும் — உங்களுடன் பேசும் உங்கள் தந்தை பாப்பு முதல் விசுவாசிகளின் கடைசியானவன் வரையுமுள்ள சகல அங்கத்தவர்களையும திருச்சபையின் அரவணைப்பில் ஒன்று சேர்க்கிறது. வேதபோதக அலுவலில் ஈடுபட்டிருக்கும் ஆயர்களும், குருக்களும் மேற்றிராசன சுதேசக்குருக்களும் உலகம் அனைத்திலுமிருந்து திரட்டப்பட்டு, 800-க்கும் அதிகமான வேதபோதக நிலையங்களைத் தாபரிக்கும் பாப்பரசரின் மறைபரப்புப் பணிச்சபைகளிற்றான் தமது பூரண நம்பிக்கையையும் வைத்திருக்கின்றனர்.

ஆராய்ச்சிக் குழுக்களும் அலுவலகங்களும் மேற்படி நிலையங்களின் பிரிவுகளைப்பற்றிச் செய்த ஆராய்ச்சியானது மிகக் கஷ்டமானதும் நுணுக்கமானதுமாயிருந்தபோதும், வேதபோதகப் பணியாளரின் நாளாந்த நடைமுறைக்கும், அன்னார் சேமலாபத்துக்கும் அப் பிரிவுகள் அவசியமானவை எனக் கண்டுணரப்பட்டது. மேலும் இவ்வித பாகுபாட்டால் வேதபோதக நாடுகளிற் சில மேலதிகமாகவும், சில பாராமுகமாகவும் விடப்படும் நீதியீனத்துக்குள்ளாகும் நிர்ப்பந்தமும் தவிர்க்கப்படுகின்றது. அன்றியும்,



பாப்பரசாது விசுவாசப் பரப்புதற் சபையின் பணியில்லையேல, மறைப்போதக ஆயர்கள் தமது மேற்றிராசனங்களின் தாபரிப்பை ஒழுங்காகப் பெறவும், திட்டங்களைச் செயல் படுத்தவும் முடியாதிருப்பர். அவ்வாறே புனித இராயப்பர் சபைப் பணியின் உதவியின்றிச் சுதேச குருமாரை உருவாக்க முடியாதிருக்கும். திருப்பாலத்துவ சபையின் உதவிகிடையாதுவிடின் அநாதைகளும், நோயாளருமான பெருந்தொகையான சிறுவர்களைக் கவனிக்கவும் முடியாதிருக்கும்.

திருச்சபையின் ஒவ்வோர் உறுப்பினரும் அவர்கள் எப் பதவியிலுள்ளோராயிருந்தாலென்ன, ஏற்கனவே திருச்சபையின் பொது முயற்சிகளிற் பங்குபற்றுபவர்களாயிருந்தாலென்ன, தமது ஒத்துழைப்பின் பங்கை அதன் பொது முயற்சிகளுக்குக் கொடுப்பார்களாக. உதாரணமாகப் பாப்பரசருடைய வேதபோதகப் பணிபுரிவோர் அதேசமயத்தில் தமது ஆயருக்கும் இறைமக்கள் அனைவருக்கும் உரியவராகின்றனர். அதுமட்டுமன்றி அவர்கள் அதே வேளையில் தற்கால உலகின் பெருமுயற்சிகளிலும் பொதுத் திட்டங்கள் புதுமுறைகள் என்பவற்றோடும் இணைந்துமநடப்பவராகின்றனர், மோட்டுபுரொப்றிஓ **எக்கிளேசியே சங்ரே** (இல. 13, 2). பாப்பரசருடைய மறைபரப்புச் சபைகளின் பணியானது இறைமக்களுக்கு சுவிசேஷ நற்செய்தியைப் போதிக்கும் பரிசுத்த ஸ்தானக் குழுவோடு நெருங்கியவிதமாக இணைந்திருப்பதுமன்றி, இறை மக்களது வேதபோதக மனப்பான்மைக்கும புத்துயிரளித்து, அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தவும் முயற்சிக்கின்றது. அப்போஸ்தொலிக்க ஸ்தானத்தின் கட்டுக்கோப்பின் அங்கத்தவர்களாய் இருப்பதின்நிமித்தம் சகல ஆயர்களும், தமது சொந்த முன்னேற்றத்திலும் நேரடியான கரிசனை எடுப்பார்களாக. "ஆயரின் மறைபரப்புப்பணி திருச்சபை முழுவதின் நன்மைக்காக இன்னும் அதிக பயன் நிறைவோடு நடைபெற, அவர்களுடைய சொந்த மாநிலத்துள் யாவரும் ஒழுங்கான முறையில் ஒத்துழைக்கத் தூண்டவல்ல காரியங்களை ஆயர் பேரவைகள் மேற்பார்ப்பது நல்லது. மேலும் மறை பரப்புவதற்காக ஒவ்வொரு மேற்றிராசனமும் தன் வருவாய்க்கேற்ப ஒவ்வோராண்டும் கொடுக்கக் கடமைப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட தொகைபற்றியும் பேரவைகளில் ஆயர்கள் ஆய்வு செய்யலாம் (மறைபரப்புப் பணிபற்றிய தீர்மானத் தொகுப்பு 38, 5).


வேதபோதகப் பணிக்கென்று சன்மானம் வழங்குவோர் ஒருவிதத்தில் திருச்சபையின் உண்மையான கத்தோலிக்க மனப்போக்கிலே பயிற்றப்படுபவராவர். ஆனால் அப் பேருபகாரிகள் ஒருபுறத்தில் தமது சொந்தப் புகழ்ச்சிக்காகவும், மறுபக்கத்தில் மோட்ச சம்பாவனை கருதியும் கொடைகளை வழங்கக்கூடும் என்பதும் ஒரு தலை. அதேவேளையில் வேதபோதகப் பணியின் இழைமைநிலையிலேயே இருந்துகொண்டு, எண்ணிறந்த கஷ்டங்களை அனுபவிக்கும் ஆசியா, ஆபிரிக்கா, ஓஷானிய போன்றபிற்போக்கான நாடுகள் தங்கள் சுயதேவைக்கு யாரிடம் திரும்புவது? யார் முகம் நோக்குவதெனத் தெரியாது இடர்ப்படுகின்றன. இந் நாடுகளின் வேதபோதகப் பணிக்கென்று உபகாரிகள் தமது கொடைகளைக் கொடுப்பாராயின் பரலோகத்தில் அவர்களது சம்பாவனை பூரணப்படுத்தப்பட்டதாயிருக்குமென்பது கண்கூடு.

ஆயர்களாலும் விசுவாசிகளாலும் வேதபோதகப்பணிக்கென்று கொடுக்கப்பட்ட உதவியானது எமதுசுற்றுநிருப (**போப்புலோறும் புரொக் இரெறசிஓ**) அழைப்பின் பதிலாக இருக்கிறது. ஏனெனில் அது மனப்பூர்வமாகவும் ஞானத்துடனும் வேதபோதகப்பணியின இடையறா முயற்சியினால் வளர்ச்சியடைந்த இறை மக்களின் ஒத்துழைப்பின்பயனாகும். தற்காலவுலகிற் தன்நிறைவுபெற்றுச் சுய உரிமையுடன் வாழத் தகைமையுடையோராதற்கு உயிர்நாடியாய் அமைந்த அரசியல்—கலாசார— சன்மார்க்க அறிவு விருத்திக்கு இம் மறை பரப்புப்பணி துணைபுரிகிறது.

அன்பார்ந்த சகோதரரே, பிள்ளைகளே மறைபரப்புப் பணியானது உமக்கோர் சுமையாகவின்றி, சுவிசேஷ நற்செய்தியைப் பரப்புவதில் உமக்குள்ள கரிசனையின் எதிரொலியாயிருப்பதாக. இதன் தொனியானது நீவிர் ஒவ்வொருவரும் மறைபரப்புப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# வேத போதக நாடுகளின் குரலொலி



"இவ்வுலக சம்பத்தையுடைய ஒருவன் தன் சகோதரன் கஷ்டப்படுகிறதைக் கண்டும், அவனுக்கு இரங்காமல் தன் உள்ளத்தை மூடிக்கொண்டால் தேவசிநேகம் அவனிடத்தில் நிலைப்பதெப்படி?" (I அரு. 3 : 17).

"இந்த ஆட்டுக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் எனக்குண்டு ; அவைகளையும் நான் கொண்டு வரவேண்டும். அவைகளும் என் குரற்சத்தத்தைக் கேட்கும்; அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் ஆகும்" (அரு. 10 : 16).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## பட்டுநூல் நெசவாலை

ஆறரைலட்சம்ரூபா செலவிலே நவீன யந்திரவசதிகளுடன்கூடிய பட்டுநூல் நெசவுத்தொழிற்சாலையொன்றை அமைக் குமுகமாக வலிகாமமமேற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆரம்பவேலைகளில் ஈடுபட்டுள் ளது. இது செயல்படுமிடத்துச் சுமார் 95நெசவாளருக்கும், 10நிர்வாக உத்தி யோகஸ்தர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாய் இருக்குமாம்.

## திருப்தியற்ற கல்விநிலை

"இன்று இந்நாட்டின் கல்விநிலை திருப்திகரமான நிலையில்இல்லை; முந் தியஅரசாங்கம் உதவிப்பணம்பெற்று வந்த பாடசாலைகளைக் கையேற்று அவைகளின் தரத்தைக் குறைத்துச் சீர்குலைத்துவிட்டது; முந்திரஅரசாங் கம் ஒருநல்லதிட்டம் போடாமலும், முன்யோசனைஇல்லாமலும் செய்ததவ றான செயல்களினால் கல்வித்துறை சீர் கேடானமுறையில் இருக்கிறது" என்று சனப்பிரதிநிதிகள்சபையிலே கல்விமந் திரிமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லாப் பிரேரணைபற்றிய விவாதத் தின்போது வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம்அவர்கள் கூறலா யினர்.

## சயரோக சிகிச்சைமுறை

இலங்கையிலே சயரோகிகளெனக் கண்டறியப்பட்டவர்களாய் 60,000 பேர் இருந்துவருகின்றனர். இவர் களைப் பூரணமாகக் குணப்படுத்திவிட லாமென்ற ஒருநம்பிக்கை இப்போது பிறந்திருக்கிறது. அரசினர் ஆஸ்பத்திரி களிலே வெற்றிகரமாகப் பரிசோதனை செய்யப்பட்ட ஒருபுதிய சிகிச்சை முறையே இதற்குக்காரணம். சயரோ கிகளுக்குத் தினமும் மூன்றுநான்கு முறை மருந்துகள் கொடுப்பதற்குப் பதில் வாரத்தில் இருமுறை கொடுத் துச் சிகிச்சைஅளிப்பதே இந்தப்புதிய சிகிச்சைமுறையாகும். சர்வதேச சய ரோகஎதிர்ப்புச் சங்கம் இந்தமுறை யைச் சுகாதாரப்பகுதிக்குச் சிபாரிசு செய்திருக்கிறது.

## பொதுத்தேர்தல் ஆயத்தம்

அடுத்த பொதுத்தேர்தலுக்கு இன் னும் 18மாதகாலமட்டும் இருக்கிறது; அதனால் அதற்குத் தயாராகும்படி யாக ஐக்கியதேசியக்கட்சியின் செயல் கமிற்றிக் கூட்டத்திலே பிரதமர் டட்லி சேனநாயக்க தெரிவித்திருக்கின்றார். அடுத்த பொதுத்தேர்தலில் தமதுகட்சி வெற்றியீட்டுமென்றும் அவர்கூறினா ரெனச் சொல்லப்படுகிறது.

## வர்த்தகப் பரீட்சை

அரசாங்கத்தால் நடத்தப்படும் வர்த் தக தாரதரப்பத்திர பரீட்சை வருகிற மார்கழிமாதம் 24ஆம்திகதி நடைபெற விருக்கிறது. இப்பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்கள் இம்மாதம் 26ஆம்திகதிக்குமுன் தங்கள் விண்ணப் பங்களை அனுப்பவேண்டுமென அறி விக்கப்பட்டிருக்கிறது.

## குற்றத்தடுப்பு

நாட்டிலே அதிகரித்துவரும் குற்றங் களைத் தடுப்பதில் பொலிசாருக்குஉத வியாக நல்லொழுக்கமும், கல்வியறிவு முடைய 24,000இளைஞர்களைக் கொண்ட தொண்டர்படைஒன்றைத் திரட்டுவதெனப் பொலிஸ்இன்ஸ்பெக் டர் ஜெனறல் தீர்மானித்திருக்கின்றார். இத்தொண்டர்படையில் சேர்த்துக் கொள்ளப்படும் இளைஞர்களுக்குக் குற் றத்தடுப்பு வேலையில் பயிற்சியளித்து அடையாளப்பத்திரங்கள் வழங்கப் படும்.

## புரட்சிச்சதி வழக்கு

இரண்டாவது புரட்சிச்சதிவழக்கு விசாரணை சென்றதிங்கட்கிழமை திரும் பவும் ஆரம்பமானது. அப்பொழுது அற்றோர்ணிஜெனறல் சமர்ப்பித்த ஒரு மனுவைத் தொடர்ந்து 6-வது எதிரி யான பட்டுவத்தை நீதியரசர்களால் விடுதலை செய்யப்பட்டார். தேசியஅர சாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்த தாக ஞானசிகதேரோஎன்ற புத்தகுரு, முன்னாள் இராணுவதளபதி மே ஜர்ஜெனறல் ஏ. ஆர். உடுகம ஆகியவர் கள் உட்பட 28பேர்மீது குற்றஞ்சாட் டித் தொடரப்பட்ட இந்தவழக்கிலே முதலில் 6பேரும், இப்போது மற்றோர் எதிரியும் விடுதலைசெய்யப்பட்டனர். இப்பொழுது 21பேர்மீதே விசாரணை நடைபெறுகிறது.

## இரத்ததான தினம்

அதிகமதிகமான இரத்ததானக்காரர் கள் தேவைப்படுகின்றனரென்று தேசிய இரத்தசேவைத்தலைவர் மனுப் பண்ணியதின்பேரிலே கொழும்பிலுள்ள லெவர் பிறதேர்ஸ் தொழிற்சாலை ஸ்தா பத்தின் வைத்தியஅதிகாரி சென்ற புரட்டாசிமாதம் 26ஆம்திகதியன்று அந்தத்தொழிற்சாலையில் "இரத்ததான தினம்" ஒன்றை ஒழுங்குபடுத்தினர். அன்றுதினம் அதனைஒழுங்குபடுத்திய டக்றர் எஸ். எச். நட்வத்தையும், 16 பெண்மணிகளும்உட்பட அங்குகடமை பார்க்கும் மனேஜர்மார், உத்தியோ கஸ்தர்கள், தொழிலாளர்களாய் 81 பேர் இரத்ததானம் செய்தார்கள். இதனைத்தொடர்ந்து அனைவருக்கும் ஒருசிற்றுண்டி உபசாரணை நடத்தப்பட லாயிற்று.

## புதிய அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணப் புதிய அரசாங்கஅதிப ராகத் தற்போது நுவரெலி அரசாங்க அதிபாக இருந்துவரும் திரு. எவ். சி. பீற்றேர்ஸ் நியமனஞ்செய்யப்பட்டிருக் கின்றார். இவர் இங்குவந்து வருகிற கார்த்திகை 1ஆம்திகதி பதவியேற்கிற வரை போஸ்மாஸ்றர்–ஜெனறலாக நிய மனம்பெற்றுள்ள திரு. வேர்ணன் அபயசேகராவேதொடர்ந்து அரசாங்க அதிபாய் இருந்துவருவார்.

## மருந்து தயாரிக்கும் புதியமுறை

மருந்துமூலிகைகளை உரலில்போட்டு இடித்துத் தயாரிக்கும் பழையமுறை யை ஒழித்துக்கட்டி அதற்குப்பதில் யந்திரங்கள்மூலம் நவீனமுறையில் இடித்துத்தயாரிப்பதென ஆயுள்வேதப் பகுதிக் கமிஷனர் தீர்மானித்திருக்கின் றார். அதனால் மருந்துப்பொருட்களை அரைப்பதற்கும், இடிப்பதற்கும், குளி கைகள் செய்வதற்கும் நவீனயந்திரங் கள் பாவிக்கப்பட விருக்கின்றன. இந் தப்புதியமுறையினால் பலமருந்துவகை களை அதிககாலம்வைத்துப் பாவிக்கலா மெனக் கண்டறியப்பட்டுள்ளது. அன் றியும் மருந்துகளையும் விரைவில் தயா ரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை

கல்விமந்திரி திரு. ஈரியகொல்லமீது எதிர்க்கட்சிகொண்டுவந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணை சென்ற10ஆம்திகதி யன்று சனப்பிரதிநிதிகள்சபையிலே நீண்டநேரம் விவாதிக்கப்பட்டுக் கடை சியாக 33அதிகப்படியான வாக்கு களால் படுதோல்விகண்டது. அதற்குச் சாதகமாக 49வாக்குகளும், பாதக மாக 82வாக்குகளும்அளிக்கப்பட்டன. தமிழரசுக்கட்சி எம். பி.கள் அதனை எதிர்த்து வாக்களித்தனர்.

## மா நகரசபைத் தேர்தல்

வருகிற மார்கழிமாதத்தின் நடுப் பகுதியில் நடைபெறுமென எதிர் பார்க்கப்படும் யாழ்ப்பாண மாநகர சபைத்தேர்தலுக்கு அபேட்சகர்களாக முன்வந்துள்ளவர்கள் தங்கள் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய தினம் இம்மாதம் 30ஆம்திகதி [illegible] கிழமையென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழரை எச்சரிக்கின்றார்

"தமிழ்பேசுமக்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டிய ஒருநெருக்கடி யான நிலைமைஏற்பட்டுள்ளது; தமி ழினத்தின் எதிர்காலத்தைப்பற்றிச் சிந் திக்காமல் தான்தோன்றித்தனமாக நடந்துகொண்ட தமிழ்த்தலைவர்களால் தமிழினம் மோசமான ஒருநிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது; தமிழர்கள் அடுத்த ஒருஐந்துஆண்டுகளுக்குள் தமக்குள்ளே இதுகாலவரை இருந்து வந்த வேற்றுமைகளை மறந்து ஒற்று மைப்படாவிட்டால் தமிழினம் இந்த நாட்டில் நிரந்தர இரண்டாந்தரப் பிர சைகளாகிவிடும்" என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம்அவர் கள் அன்றுநிகழ்ந்த ஆண்டுவிழாஒன் றில் உரைநிகழ்த்தியபோது கூறியிருக் கின்றார்.

## செல்வந்தரான கம்யூனிஸ்தர்

மஸ்கோபிரிவுக் கம்யூனிஸ்த தலைவர் களில்சிலர் இடாம்பீகமாக வாழ்வதை யிட்டும், முன்னர் ஏழைகளாயிருந்து தற்போது கட்சியில் செலவாக்குப்பெற் றுள்ளசிலர் கொழும்பில் காணிகள் வாங்கி வீடுகள்கட்டியிருப்பதையிட் டும், 35,000முதல் 1,00,000ரூபா வரை பெறுமதியுள்ளவீடுகளை இவர் கள் கட்டியிருப்பதையிட்டும், இவர் களில்சிலர் வீட்டுவாடகையாக மாதம் ஒன்றுக்கு 200முதல் 400ரூபாவரை பெறுவதையிட்டும் கட்சிஅங்கத்தவர் களிடையே பெரும்அதிருப்தி நிலவி வருகிறது.

## சிங்களம்படித்தும் வேலையில்லை

சிங்களம்படித்துத் தேர்ச்சிபெற்றால் தென்னிலங்கையிலுள்ள பாடசாலை களிலே தமிழ்ப்பட்டதாரிகளை ஆசிரி யர்களாக நியமனம்செய்வதாகச் சனப் பிரதிநிதிகள்சபையிலே அப்போது கல்விமந்திரி தெரிவித்திருந்தார். நூற் றுக்குமேற்பட்ட தமிழ்ப்பட்டதாரிகள் சிங்களத்தில் தேர்ச்சிபெற்றார்கள். இவர்களின் சிங்களத்தேர்ச்சியை அறிந்துகொள்ளுமாறு கல்விப்பகுதி இருமாதங்களின்முன் ஒருபரீட்சை நடத்தியது. சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற 117தமிழ்ப்பட்டதாரிகள் பரீட் சையெடுத்தார்கள். இவர்களில்50 பேர்வரை சிங்களத்திலே எஸ். எஸ். சி. சித்தியடைந்தவர்கள். ஆயினும் எவ ருக்காவது வேலைவழங்கப்படவில்லை.

## ஒலிபெருக்கிபற்றிய புதிய எச்சரிக்கை

பிறருக்கு இடைஞ்சல் உண்டுபண் ணக்கூடிய வகையிலே ஒலிபெருக்கி கள் உரத்ததொனியில் பாவிக்கப்படுவ தாக முறையிடுசெய்யப்பட்டால் அந்த இடத்திற்கு விரைந்துசென்று ஒலி பெருக்கிகளைக் கைப்பற்றுவதோடு அவைகளை வாடகைக்குக் கொடுப்பவர் கள்மீது சட்டநடவடிக்கைஎடுப்பதற் கும் பொலிசார்சகலருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒலிபெருக்கி களை அரசாங்கத்துக்குச் சொந்தமான மின்சார, தந்திக் கம்பங்களிலும், வீதி களிலுள்ள மரங்களிலும் பொருத்திப் பாவிக்குமிடத்து அவைகள் பறிமுத லாகும்.

## திருமலைசெல்லும் வத்தைகள்

திருகோணமலைத் துறைமுகத்தில் இறக்குமதி, ஏற்றுமதி செய்வதற்குப் போதியவத்தைகள் இல்லாதகாரண மாகக் காங்கேசன்துறைத் துறைமுகத் திலிருந்து 15வத்தைகள் அங்கு கொண்டுசெல்லப் படுகின்றன. "கஜ பாகு" என்ற இலங்கைக் கடற்படைக் கப்பல் சென்றஞாயிற்றுக்கிழமை காங் கேசன்துறை வந்துசேர்ந்து யாழ்ப் பாண மாவட்டத்துறைமுக சமாசத் தைச்சேர்ந்த இந்தச்சிறந்த 15வத்தை களையும் தொடுத்துச்செல்லுகிறது.

## யாழ்-மேற்றிரா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் கொழும்பிலுள்ள அர்ச். பேர் ணாட் குருமடத்துக்கு அனுப்பப்பட் டாலும் அங்கே அவர் தரித்தது 3 கிழமைமாத்திரமே. சிரேஷ்டர் களின் கட்டளைப்படி 1948-ம் ஆண்டு புரட்டாசி 24-ம் திகதி இலங்கையை விட்டு ஐப்பசி 11-ம் திகதி றோமா புரியை அடைந்து அங்குள்ள உலகப் பிரசித்திபெற்ற வேதபோதகச் சர்வ கலாசாலையில் ஏழு ஆண்டுகள் தங்கி வேதசாஸ்திரங்கள் கற்றுவந்தார்.

தேவதாயின் வருடமாகிய 1954-ம் ஆண்டு மார்கழி 7-ம்திகதி பியெற்றோ சிகிஸ்மொன்டி ஆண்டகை அவர்க ளால் குருவாக அபிஷேகம் செய்யப் பட்டு அடுத்தநாளாகிய அமலோற் பவ அன்னையின் திருநாளன்று தமது முதற்பூசையைச் சம்பேதுருவானவ ரின் மகாதேவாலயத்தில் ஒப்புக் கொடுத்தார். சிலமாதங்கள் சென்ற பின் அசிசி, லூர்துபதி ஆதியாம் திருத்தலங்களைத் தரிசித்து 1955-ம் ஆண்டு ஆடி 18-ம் திகதி தாயகம் திரும்பினர்.

யாழ்ப்பாணம் திரும்பியதும், 1956 புரட்டாசிவரையும் நல்லூர் மீசாமி லும், ஆனி1958வரை ஆசனக்கோவி லிலும் உதவிப்பங்குக் குருவாகத் தொண்டுசெய்தார். 1958 ஆடிமுதல் 1962 வைகாசிவரை திருகோணமலை மேற்றிராணியாரின் காரியதரிசியாகக் கடமையாற்றியபின் யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்குத்திரும்பி, 1962 ஆடிதொடக்கம் 1966 ஐப்பசி வரை தோலகட்டியிலுள்ளசெபமாலை ஆச்சிரமத்தின் தலைவராகவும் அங் குள்ள துறவிகளின் ஆத்மகுருவாக வும் பணிபுரிந்தபின், 1967 வைகாசி வரை நாரந்தனைப் பங்குக்குருவாக வும், 1967 ஆனியிலிருந்து இன்று வரை யாழ்ப்பாண ஆசனக்கோயில் பங்குக்குருவாகவும் தொண்டுபுரிந்து வந்திருக்கிறார்.

தமது தேவஅழைத்தலுக்குக் கார ணமாயிருந்த காலஞ்சென்ற வண. எஸ். ஜீ. ஹில்லறி சுவாமியார், எஸ். ஜே. வேதநாயகம் சுவாமியார், ஏ. எஸ். யோசேப் சுவாமியார், வி. ஏபிர காம் சுவாமியார், அர்ச். சூசையப்பர் சபைச் சகோதரர்களையும், குருமடத் திலே தம்மை வழிநடத்திவந்த காலஞ்சென்ற எஸ். பீற்றர் சுவாமியா ரையும், எஸ். இம்மனுவேல் சுவாமி யார், பி. ஏ. ஜோண் சுவாமியார், என். அருள்நேசன் சுவாமியார், சாள்ஸ் நவரட்ணம் சுவாமியார், மற் றும் குருக்களையும், புதிய துணைஆயர் நன்றியுடன் நிலைவுகூருகின்றார்.

Veritatem Facere in Caritate அதாவது: "பரம அன்பில் உண்மை யோடு நடக்க" என்பதே அன்னாரின் மேற்றிராணியாரின் விருதுவாக்கியம்.

**தேவன் நமக்குத்தந்த புதிய துணைஆயரை இன்றும் என்றும் ஆசீர்வதிப்பாராக!**

## புதுவகை நெல்

இலங்கையின் ஈரலிப்பான பகுதி களிலே விதைத்து அதிகபலன்பெறக் கூடிய ஒருபுதுவகைநெல்லை மத்திய விவசாயஆராய்ச்சிநிலையம் கண்டுபிடித் திருக்கிறது. அப்பகுதிகளில் தற்போது விதைக்கப்படும் எச-4என்றநெல்லிலும் இந்தப்புதுவகைநெல் 40சதவிகிதம் கூடுதலானவிளைவைத் தருமெனக் கண்டறியப்பட்டிருக்கிறது.

## தமிழ்மொழிச் சட்டவிதிகள்

உத்தியோகமொழிச் சட்டமும், தமிழ்மொழிச்சட்ட (விசேட) விதிக ளும ஏககாலத்தில் கண்டிப்பாக நடை முறைக்குக் கொண்டுவரப்பட வேண்டு மென்று சகலநிர்வாகக் காரியதரிசி களையும் நிதிமந்திரி காரியாலயம் சப் பத்தில்அனுப்பிய சுற்றறிக்கைஒன்றின் மூலம் கேட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேதபோதக ஞாயிறு

(பி. சவரிமுத்து)

**ஞாயிறு**—என்றதினம், திருச்சபையின் அங்கத்தவர்களாகிய குருகுலத்தாரும், துறவறநிலையினரும் ஏனைய சகல விசுவாசிகளும் தங்களுக்குத் திருமீட்பரின் நற்செய்தியைப் பரப்பும் பணியில் உள்ளபங்கை—கடமையை ஞாபகமூட்டும் ஒருதினம் எனலாம். இவர்கள் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவோடு ஒருடலாகப்பெற்று இறைமக்களாக உருப்பெறுகின்றனர். "யூதன் என்றும், கிரேக்கன் என்றும் இல்லை; அடிமை என்றும் சுயாதீனனென்றுமில்லை; ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்கள் எல்லோரும் யேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் ஒன்றுயிருக்கிறீர்கள்" (கலா. 3 : 28; கொலோ. 3 : 11).

எனவே, கிறிஸ்துவின் உடலை வளர்ச்சியுறச் செய்ய உலகிலுள்ள விசுவாசிகள் யாவருக்கும் உண்மையிலே சமமானபங்கிருக்கிறது. இப்பணியை விசுவாசிகள் ஆர்வமுடன் மேய்ப்பர்களோடும், போதகர்களோடும், துறவறநிலையினரோடும் ஒத்துழைத்து ஆற்ற வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

"திருச்சபையின் மீட்புப்பணியில் பங்குபெறுவதே பொதுநிலையினரின் அப்போஸ்தலப் பணியாகும். (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் – திருச்சபை பக்கம் 88, பங்தி 33) இப்பணியானது ஆதிக்காலத் திருச்சபையில் நற்செய்தியைப் பரப்பப் புனித சின்னப்பரோடு ஆண்டவரில் பெரிதும் உழைத்த ஆண் பெண் அனைவரினது ஒப்பற்ற பணிக்கு ஒத்ததாயிருக்கிறது" (பிலி. 4 : 3; உரோ. 11 : 3). அந்தக் காலத்திற்போலவே இந்தக்காலத்திலும் இறைவனின் மீட்புத்திட்டம் அநுகூலமடைவதற்கு ஆர்வமுடன் பங்குபெறுவது சகல பொதுநிலையினரின் அருங்கடனுயிருக்கிறது.

இக்கடமையைப் பொதுநிலையினராகியநாம் எவ்வாறு திறம்படச்செய்து தேவனின் மீட்புத்திட்டத்தை உருவாக்கலாம் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாயிருக்கிறது. இக்கடமையைப் பொதுவாக ஏழுவகைகளில் செய்யமுடியுமென்று கூறலாம். **முதலாவது, பொதுநிலையினரின் கிறிஸ்தவவாழ்க்கை.** இவர்கள் பெருமபாலும் காரியாலயங்களிலும் வேலைத்தலங்களிலும் ஏனைய சமயத்தவர்களுடன் சேர்ந்து நமது உத்தியோகத்தையோ, தொழிலையோ செய்துவரவேண்டியவர்களாயிருக்கின்றனர். இவர்களின் வாழ்க்கையில் காணப்படும் உண்மை, நேர்மை, கடமையுணர்ச்சி, நேரந்தவறுமை, நீதிபோன்ற பண்புகள் கிறிஸ்துநாதரின் போதனைகளை மக்களுக்கு எடுத்துக்காட்டும் அரியசாதனங்களாய் அமைகின்றன. ஒருசெயல் ஆயிரம் சொற்களிலும் வலுவுடையது என்பதை நாம் மனத்திலிருத்தி எமது நாளாந்தகடமைகளைத்தேவனுக்குகந்த முறையில் செய்துவருவோமாக.

வேதபோதக அலுவலின் இரண்டாம்வகை **சேவை** எனலாம். 'உனக்கு மற்றவர்கள் என்ன செய்யவேண்டுமென்று நீ விரும்புகிருயோ அதையே நீ அவர்களுக்கும் செய் என்று திருவாய்மலர்ந்த எமது யேசுபெருமானின் திருவாக்குக்கொப்ப எங்கள் நாளாந்த வாழ்க்கையில் **சேவையே** சிறந்து விளங்கவேண்டும். பிறரன்பின் எடுத்துக்காட்டாகச் சேவை அமைகிறது. யேசுநாதர் இப்பூவுலகில்வாழ்ந்தகாலத்தில் சேவையே தன்முக்கிய இலக்காகக்கொண்டு வாழ்ந்தார். அவர் செய்த புதுமைகள், போதித்த உண்மைகள் யாவும் சேவையையே மையமாகவுடையன. எனவே, அவருடைய திருச்சபையைப் பரப்புவதற்குச் சேவைகளே சிறந்த ஆயுதங்களாயிருக்கின்றன. இவை பிறசிநேகத்தால் உந்தப்பட்ட தனிப்பட்ட அல்லது சமூகசேவைகளாய் இருக்கலாம். பொதுநிலையினர் எல்லோரும் சேர்ந்து தர்மசேவைகளில் ஈடுபடல் அத்தியாவசியமாயிருக்கிறது. வேதபோதக அலுவலின் மூன்றும்வகை **போதித்தல்** எனலாம். எமது அறிவுக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றமுறையில் நாம் எமக்குச் சந்தாப்பங்கிடைக்கும்போதெல்லாம் கிறிஸ்துவின் நற்செய்தியை ஏனையமக்களிடையே பரப்பவேண்டிய கடமை பூண்டவர்களாயிருக்கிறோம். காரியாலயங்களிலோ, வேலைத்தலங்களிலோ, புகையிரதத்திலோ, வேறு இடங்களிளோ தருணங்கிடைக்கும் போதெல்லாம் கிறிஸ்துநாதரின் போதனைகளைத் தகுந்தமுறையில் எடுத்துவிளக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அடுத்தபடியாக இப்போதித்தல் பணியை நம்மால் கூடியளவுக்கு (இது எல்லாரும் செய்யக்கூடிய தொண்டல்ல) **எழுத்துமூலம்**—பிரசங்கங்கள்மூலம் — வெளியீடுகள் மூலம் நாம் ஏனையமக்களிடையே பரப்பமுடியும். எழுத்துருவத்தில் வெளிவந்த போதனைகளை ஒருவர் திரும்பத் திரும்ப வாசித்துப் பலனடைய முடியும். அவற்றை நீண்டகாலத்துக்கு ஒருவர் தம்முன்வைத்திருக்கமுடியும். இவைபோன்ற காரணங்களின் நிமித்தம் **"அச்சு. அப்போஸ்தலத்துவம்"** தற்போது உலகில் முக்கிய இடம் பெறுகிறது. இவற்றைப்போலவே நாடகங்கள், திரைப்படக்காட்சிகள் வானொலிப் பேச்சுகள் என்பனவும் தற்காலத்தில் வேதப்பரப்புதலின் சிறந்த உபகரணங்களாய் அமைகின்றன.

இன்னுமொரு வேதப்புரப்புதற்கேற்ற சிறந்தவழி **குருக்களை, கன்னியர்களை உருவாக்க உதயிபுரிதல்.** இதை நாம் இரண்டுவகைகளில் செய்யலாம். ஒன்று எமது புதல்வர்களையும், புதல்விகளையும் குருநிலைக்கு அல்லது துறவற நிலைக்கு அர்ப்பணித்தல் அல்லது குருமடங்களிலும் கன்னியர் மடங்களிலுங் பயிற்சிபெறும் ஏழைப்பிள்ளைகளின் தாபரிப்பை நாம் கையேற்று அதற்குவேண்டிய நிதி உதவியைச் செய்துவருதல். இவர்களில் மிகச்சிறிய ஒருவனுக்குச் செய்ததைத் தனக்குச் செய்ததாகவே ஏற்றுக்கொள்ளும் யேசுபெருமான் எங்களுக்கு வேண்டிய சன்மானத்தைத் தந்தருளுவாரன்றோ. "வேளாண்மையோ ஏராளம் வேலையாட்களோ மிகச் சொற்பம்" எனவே, வேலையாட்களை அதிகரிக்கச்செய்யும் பணிகள் யாவும் வேதபோதக அலுவல்களாகவே இருக்கின்றன.

அடுத்தபடியாகத் தேவைப்படும் உதவி **பணம்** எனலாம். எத்தனையோ நாடுகளில், விசேஷமாக வேதபோதக நாடுகளெனப்படும் தேசங்களில், பணக்கஷ்டம் காரணமாகப் பலசேவைகளைச் செய்யமுடியாத நிலையில் அப்பகுதி ஆயர்களும், குருக்களும், பொதுநிலையினரும் இருக்கின்றனர். பணக்கஷ்டம் காரணமாகப் பல மக்கள் வாடிவதங்கி மாண்டுமடிகின்றனர். போதிய பொக்கிஷ வசதிகள் சமூகசேவைகள் இல்லாமையின் காரணமாக வேதப்பரப்புதல் தடைபடுகின்றது. எனவே, வேதப்பரப்புதலுக்காக நம்மாலியன்ற பண உதவியை நாம் மனமுவந்து அளித்தல் எம்பாரிய பிறர்சிநேகக்கடமையாயிருக்கிறது.

ஈற்றில் நாம் குறிப்பிடவேண்டிய வழி **செபம்.** "பவுல் நட்டான்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினன்; விளையச் செய்தவர் கர்த்தர்" என்று அர்ச். சின்னப்பர் மிகவும் தெளிவாகவும் சிறப்பாகவும் வரைந்திருக்கிறார்.

வேதபோதகத்தின் வாலாற்றை ஆராயுமிடத்து அர்ச். பிரான்சிஸ்சவேரியார் தம் அரிய போதனைகளால் பல நாடுகளில் மனந்திரும்பிய மக்களின் தொகையிலும்பார்க்க, அர்ச். சின்னத்திரேசம்மாள் தமது செபங்களாலும்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## திருமண அறிவித்தல்

திரு: திருமதி T. தம்பிராசா அவர்களும், திரு: திருமதி J. D. சேனுதிராஜா அவர்களும், தங்கள் புத்திரன் திரு. அன்ரன் தம்பிராசா, B. Sc. Dip. in Ed; (Staff, St. Michael's School. S. E. 16) அவர்கட்கும், தங்கள் புத்திரி செல்வி புஷ்பராணி சேனுதிராஜா (Staff, Pathology Dept; Paddington Green Chi-ldren's Hospital) அவர்கட்கும் இங்கிலாந்தில் ஹான்வெல் 7-ல் (Hanwell W. 7) உள்ள தேவமாதாவும், புனித ஞசையப்பரும், தேவாலயத்தில் இம்மாதம் 26-ந் தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்குக் திருமணம் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்:

அன்றையதினம் வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் கோவிலில் காலை 6-30 மணிக்கு ஒரு நன்றியறிந்த தோத்திரப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் உறவினர், நண்பர், கன்னியாஸ்திரிமார், குருமார் அனைவரையும் புதுத்தம்பதிகளுக்காக மன்ருடும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம்:

இங்ஙனம்
திரு. திருமதி T. தம்பிராசா.
யாழ்ப்பாண ரோட்,
வல்வெட்டித்துறை:

---

தவக்குரு

## அன்ரனி லீயோ இராசேந்திர அடிகளார்


யாழூர் மறைமாவட்டத்

## துணை ஆயர் ஆகின்ருர்

—( ஆசிநாதர் )—

யாழ்மறை மாநில மக்களாம் நாமும்
மேவுறுஞ் செய்தி அறிந்தே மகிழ்ந்தேம்
யாழ்மா வட்டத் தலைமைத் தானச்
சீர்தோய் பெரிய மாதா ஆலயப்
பங்கினை நடத்தும் பண்பமை குரவர்
**அன்ரனி லீயோ இராசேந்** **திரனெனும்**
பொன்பெறு நாமம் புனையப் பெற்றேன்
தூய்மைப் பேற்றுல் தெய்வ அருளினுல்
ஆயராம் பதவி அடையப் பெற்ருர்
அகமகிழ் வோடு ஆண்டவன் தனக்குத்
தகவுறு நன்றி சாற்றுவோ மென்றும்
எங்கள் குரவர் எல் ஆர் அன்ரனி
எங்கள் ஆயர் ஆவது பொருத்தமே.
எல்லார் நாவிலும் எல் ஆர் அன்ரனி
எனுஞ்சொல் ஒலிப்பது ஏற்புடைத் தாகும்
கரம்பொன் பதியில் மூப்பர் மகனென
நன்நா மத்தா லறியப் பட்டோன்
வயதினில் இளையவர்; வரத்தினில் முதியவர்;
உயரிய கொள்கையர்; உத்தமத் துறவி
மோனமும் பணிவும் முழுமையாய்ப் பெற்றேன்;
ஞானமுங் கல்வியும் பானமாய் உண்டோன்;
ஆண்டே ழாக அருமறைக் கல்வியை
ஆண்டுறு ரேமையில் அமைவாய்க் கற்றேன்
ஏழைக ளன்பன்; எவர்க்குமே இனியன்;
ஆன்ம தாகம் அதிகமா யுற்றேன்
மேன்மை பெருமை மேட்டிமை யற்றேன்
அமைதி அடக்கம் அன்புச் சாந்தம்
இமையவர் போக்கு; ஈர்த்திடும் நோக்கு;
மறைந்த புனிதம்; மலர்ந்த மனது;
உறைந்த சாந்தம்; உண்மைப் பேச்சு;
குழந்தை யுள்ளம்; கூனிய சிரசு;
கசிவுறு நெஞ்சம்; கனிவுள பார்வை;
இழகிய இதயம்; ஈந்திடுங் கரங்கள்;
சினக்கத் தெரியான்; செருக்கு மறியான்;
இனங்குல பேதம் இம்மியும் பாரான்;
இன்சொல் அன்பு இரக்கம் ஈகையில்
மன்னவன்; மாமுனி; **மாணிக்க** **மனிதன்**
**சாங்கோ** **பாங்கம்** செபதவம் **வறுமை**
பாங்காய்க் கொண்டோன்; பண்பினில் மிக்கோன்!
அழகுறு தோற்றம்; ஆன்மீக சக்தி
அமைவுறப் பெற்றேன் **அன்ரனி** தேசிகன்
பங்குக் குரவராய்ப் பணிபல கண்டோன்;
ஆயரின் செயலராய் அனுபவ முற்றேன்;
மௌனிகன் சபையை மாணபுற நடத்தியோன்
'அன்பு **வழியே** **அறப்பணி** புரிதல்'
என்னுங் குறிக்கோள் இசைவாய் எடுத்தே
ஆயர் பதவியை அடைந்தனர் மகிழ்வே!
வாழ்த்துவம் நாமே; வழுத்துவம் நாமே!
வணங்குவம் ஆயரை மனமொழி யாலே!
நல்வர மெல்லாம் வல்லபன் ஈகுக!
வாழ்க! வாழ்க! வாழ்கபல் லாண்டே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புத் தம்பி - தங்கையருக்கு வணக்கம் !**

எதிர்வரும் **20-10-68** வேதபோதக ஞாயிறு: அன்றுதினம் நாம் எல்லோரும் எம்முடைய திருவேதத்தைப் பரவச்செய்வது எமது கடமை என்பதை நினைக்கவேண்டிய தினம்.

உங்கள் செபமும், தபமும் சகலதேசங்களும் நம் திருவேதத்தை வரவேற்கச் செய்யும். உங்கள் பரித்தியாகமும், தருமமும் எமது வேதத்திற்கு அதிக செல்வாக்கைத் தேடிக்கொடுக்கும்; உங்கள் உதாரகுணத்தைக் காட்டுங்கள்.

சுபம் !

— அண்ணா.

# உன் விரோதியை மன்னிப்பாயாக

சில ஆண்டுகளுக்குமுன் ஸ்பானிய தேசத்தில் உள்நாட்டுக் கலகம் கத்தோலிக்க மதத்தை அழித்துவிடும் போல் தோன்றியது. கம்யூனிஸ்தர்கள் அப்படியே எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் கோரிக்கை வெற்றி காணும்படி திருச்சபையின் குருக்களை நீதிநியாயமின்றி அடிபிடியாய்ப் பிடித்து வதைத்துக் கொன்றார்கள். ஒரு வயோதிப குருவானவரைச் சிறையினின்று வெளியே கொண்டு வந்து மரமொன்றில் முதுகோடு சார்த்து அவரது கரங்களைப் பின்னால் கட்டிவிட்டார்கள். ஒரு சேவகன் எதிரில் நின்று துப்பாக்கியை உயர்த்தினான் அவரைச் சுட்டுவீழ்த்துவதற்கு. அதுசமயம் குருவானவர் கொலைஞர்களைப் பார்த்து, "சிநேகிதர்களே! நான் உயிர்ப்பலியாகுமுன் தேவனைப்பார்த்துப் பிரார்த்திக்கச் சற்றுநேரங் கொடுங்கள்" என்று மன்றாடினார். உடனே உயர்த்திய துப்பாக்கியைக் கீழே தாழ்த்தினான் சேவகன். பின்னர், "கட்டப்பட்டுள் கரங்களை — கைவிரித்து மன்றாட — தயவுசெய்து அவிழ்த்து விடுங்கள்" என்று கெஞ்சினார் குருவானவர்; கயிற்றை அவிழ்க்கமுதலாய் பொறுமையற்ற சேவகன், தன் கையில் வைத்திருந்த கோடரியைக்கொண்டு கட்டின்மேல் ஒருபோடுபோட்டான். கட்டுத் தெறித்தது. குருவானவர் கைகளிலும் காயம்பட்டுத் இரத்தம் வடிந்தது. குருதிசிந்தும் தனது கரத்தைக்கொண்டு சேவகனின் நெற்றியில் சிலுவையடையாளம் வரைந்தபின் "சிநேகிதா! நான் உன்னை மன்னிக்கிறேன், தேவனும் உன்னை மன்னித்து ஆசீர்வதிப்பாராக" என்று தனது வாதனையின் மத்தியில் தனது பகைவனை மன்னித்தார் குருவானவர்;

நமதாண்டவரின் கடினகட்டளையைக் குறைவின்றி நிறைவேற்றினார் நல்ல குரு. விசுவாசிகள் எல்லோரும் அப்படியே செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள். ஆனால் மனிதசுபாவம் அவ்வாறுசெய்ய இணங்குவது கஷ்டமே. தனக்குத்தீங்குசெய்தமனிதனைப் பொறுப்பது இலகுவல்ல. தனக்கு அவன் வருவித்த காயங்கள் உறுத்திக் கொண்டேயிருக்கும். ஆதலால் பழிவாங்கும் எண்ணம் உதிக்கவே செய்யும். ஆனால் நல்லவிசுவாசி கிறீஸ்துவின் போதனையைத் துணிந்து கண்டுபாவிப்பான். பிறர்மட்டு இரங்குகிறவர்களுக்கு இரக்கமுண்டு. பிறரை மன்னிக்கிறவர்கள் மன்னிக்கப்படுவார்கள். இதுவே கிறிஸ்தவன் சீவிக்கவேண்டிய விதம். புண்ணிய சிகரமேற வழி.

## வானமே கூறாய் ?

நீல நிற வானமே
நானும் உன்னைக் கேட்கிறேன்
ஏனோ நீயும் மவுனமாய்
ஒன்றும் பேசாதிருக்கின்றாய் ?

*

கண்ணைப் பறிக்கும் ஒளிதன்னை
உன்னிடத்தில் தந்ததார்
மின்னும் நட்சத்திரமெல்லாம்
எண்ண இங்கு யாருளர் ?

*

வான வில்லை மாலையாய்
நீயேன் அணிந்து நிற்கிறாய்?
கண்ணைப் பறிக்கும் மின்னலை
கடிதில் காட்டி மறைக்கின்றாய் ?

*

தண்ணொளி தந்திடும் சந்திரனை
கண்களில் நின்றேன் மறைக்கின்றாய்?
பாதி மறைத்து வைத்திடுவாய்
மீதி பின்பு காட்டிடவோ ?

*

கண்ணீர் சிந்தி அழுவதேன்
மண்ணில் மாந்தர் மகிழவா [
விண்ணில் தேவர் அழுதனரோ ?
விரைந்து நீயும் கூறாயோ ?

இ. பே.

## அவளுக்கு உயிர் மேல் ஆசை

யூத ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வந்தது. பாரவோன் இது கண்டு கலங்கினான். செய்வதறியாது திகைத்தான். முதலில் அவனுக்கு ஒரு யோசனை. அடிமை வேலை மூலம் அழித்தொழிக்கலாம் என்பதுதான் அந்த யோசனை. ஆனால் இம் முயற்சி அதிக பயன் அளிக்கவில்லை. மீண்டும் சிந்தித்தான். அதன் முடிவு ஆண் குழந்தைகள் மடிவு!

அரச கட்டளை! இஸ்ராயேலுக்குள் பிறக்கும் ஆண் குழந்தைகளை ஆற்றில் எறியும்படியான கட்டளை அது. கட்டளையைத் தட்டிக்களித்தோர் சட்டப்படி தண்டிக்கப்பட்டனர்.

இஸ்ராயேல் பெண் ஒருத்தி அழகிய ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அழகே உருவான, அந்த ஆண் குழந்தையை ஆற்றில் எறிவதா? பெற்றமனம் பொறுக்கவில்லை. மூன்று மாதங்கள்வரை அக்குழந்தையை மறைத்துவைத்து வளர்த்துவந்தாள். முடியவில்லை அவளால். அரசன் அறிந்தால்...... அதிக கலக்கமடைந்தாள். அவளுக்கு ஒரு யோசனை உதித்தது. பிள்ளைக்கு அளவான கூடைஒன்று செய்து நீர் உள்ளே [illegible] னுள்ளே [illegible] நீலாற்றினிலே நீந்தவிட்டாள். குழந்தையின் சகோதரி மிரியம் காவல் நின்றாள் மறைவிலே. வழக்கம்போல் பாரவோன் மகள் தோழிகளுடன் ஆற்றங்கரைக்கு வந்தாள். அசைந்து சென்ற கூடை அவர்கள் கவனத்தை யீர்த்தது. எடுக்கும்படி தோழியருக்குக் கட்டளையிட்டாள். அரசகுமாரியின் ஆணைப்படி உள்ளே பார்த்தபோது பச்சிளஞ் சிசு பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அதன் கொள்ளையழகு அனைவரையும் கொள்ளை கொண்டது. அவளுக்கு உயிர்மேல் ஆசை. மறைவில் நின்றவள் ஓடிவந்து குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்கத் தனக்குத் தெரிந்த செவிலித்தாய் இருப்பதாகக் கூறி அரசகுமாரியின் வேண்டுதலின் பேரில் குழந்தையின் தாயை அழைத்து, வந்தாள். மோசேஸ் என்று குழந்தை பெயர் பெற்றது. மோசேஸ் என்பதற்கு நீரிலிருந்து காக்கப்பட்டவன் என்று பொருள். அரசகுமாரி உயிர்மேல் ஆசை வைத்தபடியால் மோசேஸ் காப்பாற்றப்பட்டார்.

இ. பேர்ணுட்

## கண்டுபிடியுங்கள்

ஒரு சுரூபத்தைக் கண்ணுறும்போது அப்புனிதரோ அன்றேல் புனிதவதியோ அணிந்திருக்கும் அல்லது கொண்டுசெல்லும் பொருளைக் கொண்டு அவர்களை இன்னாரென்று அறிந்துகொள்ள முடியும். பின்வரும் விபரங்களைக்கோண்டு அவர்களை இன்னாரென்று கண்டுபிடியுங்கள். இயலாதுபோகுமிடத்து அவர்களின் பெயர்எழுத்துக்கள் அடிதலை மாறி இருப்பதைக் கவனித்தாவது கண்டறியுங்கள்.

(1) இப்புனிதர் உயிரோடுதோல் உரியப்பட்டார். அதனால் அவருடையசுரூபம் அவர் சொந்தத்தோலையே கொண்டுசெல்வதைக் காண்பிக்கின்றது. இவர் யார்?

(ர்யாமைலோதத்ர்ப தனிபு).

(2) இப்புனிதர் ஒரு நங்கூரத்தைக் கொண்டிருக்கிறார். இந்த நங்கூரம் வழமையிலே அவர் ஒரு வேதசாட்சிஎன்பதைக் குறிப்பிடுகின்றது. இவர் புனித இராயப்பராலேயே குருப்பட்டம் அருளப்பட்ட காரணமாகப் பிரஸ்தாபம் பெற்றவர். அவரையே பின்தொடர்ந்து பாப்புவாக வந்தார். கி.பி. 101-ம் ஆண்டு இவர் வேதசாட்சியானவர் யார்?

(துந்மேளகி தனிபு);

(3) இப்புனிதவதி ஒரு சிலுவை வைத் தாங்கியிருக்கின்றாள். ஏனெனில், இவளே இரட்சகரின் உண்மையான திருச்சிலுவையைக் கண்டுபிடித்தவள். இவள் ஒரு பெரிய ரோமைச் சக்கிரவர்த்தியின் தாய். இவள் யார் ?

(ள்மாம்னலேஎ தனிபு).

(4) இப்புனிதவதி வெளிஉலகுக்கு மறைந்துவாழும் ஏகாந்த கன்னிகா சபைஒன்றை அடியிட்டவள். தனது இருதயத்தை ஊடுருவும் அம்புஒன்றைக் கொண்டிருக்கின்றாள். ஏனெனில், இவள் தேவநேசத்தின் புனிதவதியாய் விளங்கினாள். சிறிய புஷ்பமாகிய சின்னத்தெரேசம்மாள் இவளுடைய சபையிலேயே சேர்ந்திருந்தாள். இவர் யார் ?

(ள்மாம்சரேதெ தனிபு)

(5) இப்புனிதவதி தனது கரங்களில் ரோசாமலர்களைக் கொண்டிருக்கின்றாள். சின்னயேசு அம்மலரின் இதழ்களின் பாதையிலே நடந்து செல்லத்தக்க ஒருமலராகத் தான் இருக்கவேண்டுமென ஆசித்தாள் இவள் யார் ?

(ள்மாம்சரேதெ த்னன்சி தனிபு).

## பரிசுத்த தந்தை...

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

பணிக்காக யாது செய்துள்ளீர் என்பதை அறிந்து கொள்ளச்செய்வதுடன அப்பணியில் இன்னும் மேலான உதாரகுணத்துடன் நடந்துகொள்ளவும், உம்மைத் தூண்டுவதாக. இவ்விதமாகக் கிறிஸ்துவின் "கொடுங்கள் உங்களுக்குங்கொடுக்கப்படும். அமுக்கவும் குலுக்கவும் பட்டுச் சரிந்துவிழும் நல்ல அளவை உங்கள் மடியிற் போடுவார்கள்" (லூக். 6 : 38) என்ற அமுத வாக்குகளுக்கு இலக்கானோராவீர்கள்.

இவை யாவற்றுக்கும நாமல்ல; கிறிஸ்துவே சம்பாவனையளிப்பார். மேலும் உங்கள் ஒவ்வொருவருக்கும் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டிருப்போர், உபகாரிகள் அனைவருக்கும் கிறிஸ்துவில் நாம் விரும்பும் அப்போஸ்தொலிக்க ஆசீர்வாதமும் இதுவேயாகும்.

**பரிசுத்த தந்தை**

**6—வது சின்னப்பர்—வத்திக்கான்**

புனித ஆவி திருநாள்

6-2-1968

## வேதபோதக ஞாயிறு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தியானங்களாலும், தியாகங்களாலும், புண்ணியங்களாலும் மேலதிகமான மக்களை மனந்திருப்பினாள் என்று அறியக்கிடக்கிறது. செபத்தின் வல்லமைதான் என்ன? இத்தொண்டை விசுவாசிகளாகிய யாவரும் எளிதாகச் செய்யமுடியும். ஏழைகளும்சரி, தனவந்தரும்சரி, பிள்ளைகளும்சரி, பெரியோரும்சரி, ஆணும்சரி, பெண்ணும் சரி எல்லோரும் ஏகோபித்து இந்நோக்கத்திற்காகச் செபிக்கமுடியும். நாங்கள் உண்மையாகவே செபித்தும்வருகிறோம், "உம்முடைய இராச்சியம் வருக" என்று கர்த்தரின் செபத்தில நாம் விண்ணப்பிக்கும் போதெல்லாம் வேதப்பரப்புதலுக்காகவே விசேஷமாக மன்றாடுகிறோம். ஆனால் அதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கிறோமா? அல்லது கிளிப்பிள்ளைகளைப்போல அர்த்தமற்றமுறையில் அவற்றை ஒலிக்கிறோமா? எங்கள் இருதயத்திலிருந்து எழும்பும் எண்ணங்களே செபம் என்பதை நாம் மறுத்தலாகாது. செபம் சக்திவாய்ந்தது.

## ஐப்பசி மாதத்தில் ...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

ஈடேற்றத்தைப்பற்றி விசேஷவிதமாக ஞாபகப்படுத்துவது தபசுகாலம். அது வந்துபோய் இப்பொழுது ஆறுமாதங்களாகிவிட்டன. நம் ஈடேற்றத்தில் அக்கறை கொள்ளுவதற்கு வருஷத்தில் ஒரு நாற்பது நாள்கள் போதுமா? மீதியான நாள்களில் அதைப்பற்றிச் சிந்தியாமலிருப்பதா? நம் ஈடேற்றத்தைப்பற்றி நாம் அல்லும்பகலும் அக்கறையாயிருக்க வேண்டும். அடிக்கடி செபமாலையைச் செபிப்பதனால் நம ஈடேற்றத்தைப்பற்றிய ஞாபகம் நமக்கு அடிக்கடி வரவேணடும், இல்லையெனில் நாம் செபமாலையை முறையாய்ச் செபிக்கிறோம் இல்லை என்பதே அர்த்தம்.

பதின்மூன்றும் நூற்றாண்டில் அல்பிஜென்சியர் என்பவர்களின் தப்பான போதனைகளினால் திருச்சபை இடருற்றது. திருச்சபைக்கு நேர்ந்த இடர்களில் இருந்து அதைப் பாதுகாப்பதற்காகத்தான் தேவதாயாரால் செபமாலை என்னும்கருவி புனிதசாமிநாதருக்கு அருளப்பட்டது. லூர்துபதியிலும், பத்திமாவிலும் நம்தேவஅன்னை சிபார்சுசெய்தது செபமாலைப் பக்தி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஆண்டு ஐப்பசி மீ 19-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org